தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அதிக லாபம் தரும் காலிபிளவர் சாகுபடி!



**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தை அடுத்த சிங்கனூரில் பயிரிடப்பட்டுள்ள காலிபிளவர் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சும் விவசாயி.

காலிபிளவர் சாகுபடி மூலம், 80 நாள்களில் ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்ட முடியும் என்கின்றனர் இதனை பயிர் செய்யும் விவசாயிகள்.

காலிபிளவர் அதிக சுவையுள்ள உணவுப் பொருள். காலிபிளவரில் கால்சியம் அதிகம் உள்ளது. இது நரம்பை பலமாக்கும். உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கும். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இது நல்ல உணவு. எனவே இதற்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

மக்களிடத்தில் தேவை அதிகமுள்ள இதுபோன்ற விளைபயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக அளவு லாபம் பெற முடியும். காலிபிளவர் கன்று ஒன்று 50 பைசாவுக்கு ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில் கிடைக்கின்றன. ஒரு

ஏக்கர் நிலத்தில் 15 ஆயிரம் கன்றுகள்வரை வைக்கலாம். கன்றுகள் வைத்து முறையாக பராமரித்து வந்தால் 60 நாள்களில் பூக்கள் வர ஆரம்பிக்கும். 80 நாள்களில் பூக்களை அறுவடை செய்ய முடியும்.

காலிபிளவர் செடிகள் வாங்குவது மற்றும் உரங்கள், உழவுக் கூலி, களைச் செடிகள் எடுப்பது, பூச்சிக் கொல்லி மருந்துகள் என மொத்தம் ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை செலவாகிறது.

காலிபிளவரின் ஒரு செடியில் இருந்து ஒரே ஒரு பூ மட்டுமே வரும். ஒரு ஏக்கரில் நடப்படும் 15 ஆயிரம் செடிகளில் 7,500 செடிகள் நல்ல முறையில் வளர்ந்து பூக்கள் வந்தால் கூட போதுமானது. ஒரு காலிபிளவரின் விலை ரூ.20-க்கு விற்றால் 7,500 பூக்கள் மூலம் ரூ.1,50,000 ஆயிரம் கிடைக்கும். செலவுகள் போக 80 நாளில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் லாபம் எடுக்க முடியும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். திடீர் விலை குறைவு ஏற்பட்டு பாதி விலைக்கு விற்றால் கூட ரூ.50 ஆயிரத்துக்கும் அதிக அளவில் லாபம் கிடைகிறது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே சிங்கனூர் கிராமத்தில், காலிபிளவர் சாகுபடி செய்யும், பண்ருட்டியைச் சேர்ந்த விவசாயி ஜெயபால் கூறும்போது, காலிபிளவர் நல்ல லாபம் தரும் பயிர். குறிப்பாக பனிக்காலங்களில் பயிர் செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும். கார்த்திகை மாதத்துக்கு முன் பயிர் செய்து தை மாதத்துக்குள் மகசூல் எடுத்துவிட வேண்டும்.

÷முறையாக, பராமரித்தால் 80 நாள்களில் மகசூல் எடுக்கலாம். சில நேரங்களில் ஒரு பூவின் விலை ரூ.40-க்கு கூட விற்பனை ஆகும். ஆனால் இந்த ஆண்டு அதிக விளைச்சல் காரணமாக பூக்கள் வரத்து அதிகரித்துவிட்டது. அதனால் நாங்கள் காலிபிளவர் பூவை ரூ.10-க்கு கூட விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே இந்த ஆண்டு லாபம் சற்று குறைவாகத்தான் கிடைத்தது என்றார்.

காலிபிளவர் சாகுபடி செய்யும் கால நிலைகளையும், மண்ணின் தன்மையையும், அறுவடை செய்யும்போது காலிபிளவர் பூக்களின் மார்க்கெட் நிலவரத்தையும் விவசாயிகள் தெரிந்து கொண்டு பயிர் செய்தால் அதிக லாபம் பெறமுடியும்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்ணின் தன்மைக்கே காலிபிளவர் அதிகம் விளைகிறது. கண்டமங்கலம், திண்டிவனம் பகுதிகளில் காலிபிளவரை சிறப்பாக விளைவித்து காண்பித்துள்ளனர் விவசாயிகள்.

**ஆடுகளைத் தாக்கும் நோய்களும், தடுப்பு முறைகளும்...**



**தருமபுரி,**

ஆடு வளர்ப்பது ஆதாயம் தரும் தொழில் என்பதால், ஆடுகளுக்கு வரும் நோய்கள், தடுக்கும் முறைகளை தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மற்ற கால்நடைகளுக்கு தனியாக கலப்பு தீவனம் தரப்படுவது போல் செம்மறி ஆடுகளுக்கு கலப்பு தீவனங்கள் தரப்பட வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக புல்வெளியில் பச்சை புல் மேய்ச்சல் இருந்தாலே போதுமானது. இயற்கையாகவே ஆடுகளின் உதடு அமைப்பு பூமியில் சிறு அளவில் இருக்கும் புற்களைக் கூட மேய்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளதால் வறட்சி சமயத்தில் தரையோடு ஒட்டியிருக்கும் குறைந்த அளவு உள்ள புல்களைக் கூட விடாமல் மேய்ந்து தேவையை நிறைவு செய்கிறது.

எனவே, மற்ற கால்நடைகளை விட ஆடு வளர்ப்பில் தீவனச் செலவு குறைந்து லாபம் அதிகம் காணப்படுவதால் கிராமப்புற ஏழைகளுக்கு ஆடு வளர்ப்பு சிறந்ததாகும்.

ஆடுகளுக்கு வரும் நோய்களும் தடுப்பு முறைகளும்:

வெக்கை நோய்: அதிக காய்ச்சல், வயிற்றுப் போக்கு, சாணம் நாற்றம் அடித்தல், உடல் மெலிதல், கண், மூக்கு, வாய் வழியே நீர் வடிதல், உதடுகளின் உள்புறம் ஈறுகள், நாக்கின் அடிப்பாக பகுதிகளில் புண்கள் காணப்படுதல் போன்ற அறிகுறிகள் கொண்ட இந்த நோய் வந்த ஆடுகளில் 75 சதம் சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விடுகின்றன.

இந்த நோய் தாக்காமல் இருக்க ஆறுமாத வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆடுகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும். ஒரு முறை தடுப்பூசி போட்டால் 3 ஆண்டுக்கு நோய் வராது. நோய்வாய்ப்பட்ட ஆடுகளை அகற்றி கிருமி நாசின் மருந்தால் சுத்தம் செய்ய வேண்டும்.

ஆட்டம்மை நோய்: வாய், பின்னங்கால்களுக்கு இடைப்பட்ட பகுதி, வாலுக்கு அடிப்புறம், பால்மடி போன்ற இடங்களில் கொப்புளங்கள் தோன்றுதல், அதிக காய்ச்சல், இரை தேட திறனில்லாமை நோயின் அறிகுறியாகும். இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஆடுகளை மற்ற ஆடுகளிடம் இருந்து பிரிக்க வேண்டும். பாலை குட்டிகளுக்கு கொடுக்கக் கூடாது.

அடைப்பான் நோய்: அதிக காய்ச்சல், தொண்டை மற்றும் நாக்கு பகுதியில் வீங்குதல், மூக்கு, காது வழியாக ரத்தல் கசிதல் ஏற்பட்டு இறக்க நேரிடும். இக்கொடிய நோய் ஒரு வகை நுண்ணுயிரியினால் ஏற்படும் தொற்று நோயாகும்.

இறந்த கால்நடைகளிலிருந்து இந்த வியாதி அதிவிரைவில் பரவுவதோடு, மனிதர்களையும் பாதிப்பதால் இறந்த கால்நடைகளை ஆழ புதைத்தோ, எரித்தோ விட வேண்டும். நோய்வாய்ப்பட்ட ஆடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும்.

துள்ளுமாரி நோய்: மழை பெய்த பிறகு வரக்கூடிய இந்த நோய், துளிர்ப்புல்லை அதிகம் மேய்வதால் நுண்ணுயிரியினால் தாக்குகிறது. நடக்கும் போது திடீரென

துள்ளி விழுந்து இறந்து விடும். இதைத் தவிர்க்க அனைத்து ஆடுகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும்.

கோமாரி நோய்: ஒரு வகை நச்சுயிரியினால் ஏற்படுகிறது. தீவனம், தண்ணீர் உள்கொள்வது குறையும். வாயின் உள்புறம் சிறு கொப்புளங்கள் ஏற்பட்டு புண் உண்டாகும். குளம்பின் நடுவிலும், மேல்புறத்திலும் புண்கள் இருக்கும். வாயிலிருந்து உமிழ்நீர் அதிகமாக வடியும்.

இந்த நோயினால் உயிரிழப்பு குறைவாக இருப்பினும் வளர்ச்சி குன்றி கருத்தரிப்பில் சிக்கல் ஏற்படும். குட்டிகளின் உயிரிழப்பு அதிகமாக இருக்கும். நோய் பாதிப்புக்குள்ளான ஆடுகளை தனியாகப் பிரித்து பராமரிப்பதோடு, பாலை குட்டிகளுக்கு கொடுக்கக் கூடாது.

கால்நடைகளைத் தாக்கும் நோய்களைப் பற்றியும், தடுப்பு முறைகள் குறித்து மேலும் விவரங்கள் தேவைப்படுவோர் குண்டல்பட்டியில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை அணுகலாம் என்றார் பெ.பாஸ்கர்.

## குமரியில் குவிந்த சீலா மீன்கள்!



**கன்னியாகுமரி,**

கன்னியாகுமரி வாவத்துறை கடற்பகுதியில் புதன்கிழமை ஏராளமான சீலா மீன்கள் கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கன்னியாகுமரி வாவத்துறை கடற்கரையை தங்குதளமாகக் கொண்டு 70-க்கும் மேற்பட்ட வள்ளங்களில் மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். இந்நிலையில் புதன்கிழமை அதிகாலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் வலையில் ஏராளமான சீலா மீன்கள் கிடைத்தன.

ஒவ்வொரு மீன்களும் 10 முதல் 40 கிலோ வரை எடை கொண்டதாக இருந்தன. ரூ. 4,000 ஆயிரம் முதல் ரூ. 16,000 வரை வியாபாரிகள் இந்த மீன்களை ஏலத்தில் எடுத்துச் சென்றனர். கடந்த சில நாள்களாக வெலமீன், பாறை, சாளை, நெடுவா உள்ளிட்ட மீன்கள் பிடிபட்டு வந்த நிலையில் சீலா மீன்கள் அதிகமாக கிடைத்துள்ளதால் மீனவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

**பழம், மீன்களை உலர்த்தும் சோலார் கருவி: புதுச்சேரி மத்திய பல்கலை. வடிவமைப்பு**



**புதுச்சேரி,**

பழங்கள், மீன்களை உலர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள சோலார் கருவிகள்.புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக பசுமை தொழில் நுட்ப மையம் சார்பில் சூரியஒளி சக்தி உதவியுடன் பழங்கள், மீன், பருப்புகளை உலர்த்தும் கருவி (Solar Air Heater) வடிவமைக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பாக பசுமை தொழில் நுட்ப மைய உதவிப் பேராசிரியர் டாக்டர் ஏ.ஸ்ரீகுமார் கூறியது:

பல்கலைக்கழக மானியக் குழு திட்டத்தின்படி வேளாண்மை மற்றும் தொழில்துறைகளில் சோலார் ஏர் ஹீட்டர் பயன்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புதுவையில் மீன்பிடித் தொழில் அதிகளவில் நடக்கிறது. புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள சோலார் ஏர் ஹீட்டர் கருவி மூலம் மீன்களை சுகாதாரமான முறையில் உலர்த்தி ஏற்றுமதி செய்யலாம்.ஐ சூரியஒளி மூலம் உலர்த்துவதால் கிருமிகள், பாக்டீரியாக்கள் முற்றிலும் அழிக்கப்படுகின்றன. மேலும் பருவநிலை மாற்றத்தாலும் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

விவசாயிகள் இதன் மூலம் அதிக வருவாயை ஈட்டலாம். எரிபொருள் சிக்கனம், உலர்த்தும் நேரமும் குறைகிறது. வேளாண் உற்பத்திப் பொருள்களை உலர்த்துவதன் மூலம் குறைந்தது 10 சதவீதம் அளவு லாபத்தைப் பெருக்கலாம்.

சூரியஒளி உலர் கருவி மூலம் நாள் ஒன்றுக்கு 20-25 கிலோ பொருள்களை உலர்த்த முடியும். இக்கருவியை விரைவில் வெளிச் சந்தையில் அறிமுகம் செய்ய உள்ளோம் என்றார் ஸ்ரீகுமார்.

## நாளை காதலர் தினம்: ஒரு ரோஜா விலை ரூ.15



**சென்னை,**

சென்னை கோயம்பேடு பூ மார்க்கெட்டில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ள வித விதமான ரோஜா பூக்கள்.

காதலர் தினம் நெருங்குவதையொட்டி சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு ரோஜா ரூ.15-க்கு விற்பனையாகிறது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காஞ்சிபுரம், ஒசூர், மதுரை, சேலம், ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து தினமும் லாரிகள் மூலம் பூக்கள் விற்பனைக்காக வருகின்றன.

பொங்கல் பண்டிகைக்கு பிறகு கோயில் விழாக்கள் மற்றும் முகூர்த்த தினங்கள் குறைவாக இருந்ததால் மல்லிகை, முல்லை, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்களின் விலை குறைவாகவே இருந்தது. இந்த நிலையில் கடந்த சில தினங்களாக கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்களின் விலை அதிகரித்து காணப்படுகிறது.

இது குறித்து கோயம்பேடு பூ மார்க்கெட் சங்கத் தலைவர் அருள் விசுவாசம் செவ்வாய்க்கிழமை கூறியது: பூக்கள் சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால் மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து பாதியாக குறைந்து விட்டது. சீசன் இல்லை என்பதால் முல்லை பூ வரத்து இல்லை. தினமும் 3 டன் வரை கொண்டுவரப்பட்ட மல்லிகை தற்போது 1 டன்னுக்கும் குறைவாகவே வருகிறது.  இருப்பினும் தற்போது முகூர்த்த தினங்கள் அடுத்தடுத்து வரவிருப்பதால் திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்காக பூக்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் அவற்றின் விலை தற்போது அதிகரித்துள்ளது.

ஒரு ரோஜா ரூ.15: பூ வகைகளில் ரோஜா வரத்து 70 டன்னில் இருந்து 100 டன்னாக ஆக அதிகரித்துள்ளது. ஆரஞ்சு, மஞ்சள், வெள்ளை நிற ரோஜா வகைகள் தரத்துக்கு ஏற்றவாறு கிலோ கணக்கிலும் கொத்தாகவும் விற்கப்படுகின்றன. வரத்து அதிகரித்தாலும் தேவை அதிகரித்துள்ளதால் பூக்களின் விலை சற்று அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ரூ.130-க்கு விற்பனையான 20 பூக்கள் கொண்ட ஒரு கொத்து ரோஜா, கடந்த 2 நாள்களாக ரூ.180 முதல் ரூ.200 வரை விற்கப்படுகிறது.  காதலர் தினத்துக்கு புகழ் பெற்ற சிவப்பு நிற ரோஜாவுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால் ரூ.5-க்கு விற்கப்பட்ட ஒரு பூ தற்போது ரூ.15 வரையில்

விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு காதலர் தினத்தையொட்டி வெளிமார்க்கெட்டுகளில் உயர் ரக சிவப்பு ரோஜா ரூ.35 வரையில் விற்கப்பட்டது. எனவே ரோஜா உள்ளிட்ட பூக்களின் விலை இன்னும் சில நாள்களில் தொடர்ந்து அதிகரிக்கவே வாய்ப்பு உள்ளது என்றார் அருள் விசுவாசம்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி பூக்களின் விலை விவரம் கிலோவில் (பழைய விலை அடைப்புக் குறிக்குள்):

மல்லிகை- ரூ.450 (ரூ.250)

முல்லை- வரத்து இல்லை

கனகாம்பரம்- ரூ.400 (ரூ.280)

அரளி- ரூ.150 (ரூ.85)

சம்பங்கி- ரூ.390 (ரூ.240)

சாமந்தி- ரூ.120 (ரூ.75)

**மானிய விலையில் புல் நறுக்கும் இயந்திரம்: கால்நடை உதவி இயக்குநர் அறிவிப்பு**

**வத்தலகுண்டு,**

கால்நடைகளுக்கு தீவனம் கொடுப்பதற்காக, தமிழக அரசு புல் நறுக்கும் இயந்திரத்தை 3ஆம் ஆண்டாக மானிய விலையில வழங்குவதாக, கால்நடை மருத்துவக் கோட்ட உதவி இயக்குநர் அப்துல் ஹக்கீம் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில் மேலும் இவர் செய்தியாளர்களிடம் கூறியது: இந்தத் திட்டத்தால், கொடைக்கானல், வத்தலகுண்டு, நிலக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள 15 கால்நடை மருத்துவமனைகளில் தலா 2 வீதம் 30 இயந்திரங்கள் இந்தாண்டு வழங்கப்பட இருக்கிறது. இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் 5 மாடுகளுக்கு மேல் வைத்திருக்க வேண்டும். ஒரு ஏக்கர் அளவுக்கு சீமைப்புல் நடவு செய்திருக்க வேண்டும். இந்த இயந்திரத்தின் மதிப்பு ரூ. 17,400

ஆகும். ஆனால், தமிழக அரசு 75 சதவீதம் மானியமாக அளிக்கிறது. எனவே, இந்த ஒரு இயந்திரத்தின் விலை ரூ. 4,350-க்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இந்த இயந்திரத்தின் மூலம் சீமைப்புல் மற்றும் சோளத்தட்டை ஆகியவற்றை நன்றாக நறுக்கி, மாடுகளுக்குத் தீவனமாக கொடுப்பதால், அவைகளுக்கு நல்ல முறையில் செரிமானமாகும். இதனால், பால் அதிக அளவில் சுரக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், கால்நடை மருத்துவர்கள் பிரபு, சங்கரநாராயணன், தனசேகரன், சேகர், ராமசாமி, முருகன், அருண் ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு, இயந்திரங்களின் இயக்கத்தை பரிசோதனை செய்து காண்பித்தனர். மேலும் விவரங்களுக்கு, அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைகளை அணுகி விவசாயிகள் பயன்பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தனர்.

**காதலர் தினம்: திருப்பூரில் ரோஜா பூ விலை அதிகரிப்பு**

**திருப்பூர்,**

காதலர் தினத்தையொட்டி (பிப்.14), திருப்பூரில் ரோஜா பூ உள்ளிட்ட பூக்களின் விலை, இரண்டு மடங்காக உயர்ந்தது.

ஓசூர், பெங்களூர் நகரங்களில் இருந்து வரும் ரோஜாக்கள் திருப்பூர் பூ மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு, விற்பனை செய்யப்படும். சீசனில் குண்டு மல்லி, சன்ன மல்லி பூக்கள் 10 டன் வரை விற்பனை செய்யப்படும். குண்டு மல்லி சீசன் சித்திரை மாதம் துவங்கும் நிலையில், தற்போது மார்க்கெட்டுக்கு 2 டன் வரையே பூக்கள் வருகிறது.உலகம் முழுவதும் பிப்.14ம் தேதி, காதலர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் காதல் ஜோடிகள், ரோஜா மலர்களை கொடுத்து, காதலை பரிமாறிக் கொள்வர். இந் நிலையில், ரோஜா பூக்களுக்கான தேவை பன்மடங்கு உயர்ந்துள்ளது. சாதாரண நாள்களில், விற்கும் விலையை விட இருமடங்கு விலையில் ரோஜா பூக்கள் விற்பனையாகி வருகின்றன.

கடந்த வாரங்களில் ஒரு கட்டு ரூ.100 முதல், 120 வரை விற்பனை செய்யப்பட்ட ரோஜா பூக்கள், புதன்கிழமை காலை முதல் ரூ.200 வரை விற்பனை செய்யப்படுகிறது. சாதாரண நாள்களில் ஒரு ரோஜாப் பூ ரூ.5க்கு விற்பனை செய்யப்பட்டது. இப்போது ரூ.10 முதல், 15 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதில், பைவ் ஸ்டார் ரோஸ், த்ரீ ரோஸ், பட்டு ரோஸ் உள்ளிட்ட பல வகையான ரோஜா பூக்களின் வரத்து அதிகரித்துள்ளது. குண்டு மல்லி பூவின் விலையும் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. பூக்களின் விலை அதிகம் என்றாலும், பூ மார்க்கெட்டில் பூக்கள் விற்பனையாகி விடுவதால், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.64 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 42.64 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 613 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 250 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.9 டி.எம்.சி.

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு புதிய கட்டடம்**

**மொடக்குறிச்சி,**

சிவகிரி அருகேயுள்ள நம்மகவுண்டம்பாளையத்தில் ரூ.6 லட்சம் செலவில் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு கட்டப்பட்ட புதிய கட்டடத்தை மொடக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ.  ஆர்.என். கிட்டுசாமி திறந்து வைத்தார்.

இதற்கான விழாவுக்கு கொடுமுடி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் தமிழ்செல்வி ரவி, சிவகிரி பேரூராட்சி தலைவர் பரமு (எ) ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை

வகித்தனர். வாழைத்தோட்டம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் பராசக்தி தேவராஜன் வரவேற்றார்.

விழாவில் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி, துணைத் தலைவர் பழனிசாமி, கரட்டாங்காட்டு புதூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் துரைசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**21-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் இம்மாதம் 21-ம் தேதி நடைபெறுகிறது.

ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்துக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் வேளாண் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் அதிகாரிகளும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பதில் அளித்துப் பேசுகின்றனர்.

எனவே திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும், விவசாயிகள் தங்களின் கோரிக்கை மனுக்களை இம்மாதம் 15-ம் தேதிக்குள் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கலாம். மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், அனைத்து வேளாண்துறை அலுவலகங்களில் உள்ள மானிய விலைப் பெட்டியிலும் விவசாயிகள் தங்கள் கோரிக்கை மனுக்களைப் போடலாம். இம் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**சூரிய சக்தியில் இயங்கும் பம்புசெட்டுகள்: அமைத்துப் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை மாவட்டத்தில் சூரிய சக்தியில் இயங்கும் பம்புசெட்டுகளை அமைத்துப் பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு ஆட்சியர் அ.ஞானசேகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

2013-14ம் நிதியாண்டில் 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

வேளாண் துறையில் சூரிய சக்திப் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், பிரபலப்படுத்தவும் அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

சூரிய சக்தி பம்புசெட்டுகள் கிணறுகளில் பொருத்தப்பட்டு சொட்டுநீர், தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ள பயிர்கள் பாசன வசதி பெறும் வகையில் செயல்படுத்தப்படும். சூரிய சக்தி பேனல்கள் அமைக்க மரங்கள் இல்லாத, நிழல் படாத போதுமான இடவசதி கிணற்றுக்கு அருகில் இருக்க வேண்டும்.

ஒரு சூரிய சக்தி பம்புசெட் அமைக்க ரூ.4,39,950 செலவாகும். இதில் அரசு மானியமாக ரூ.3,35,200 வழங்கப்படும். விவசாயிகளின் பங்களிப்பு ரூ.1,04,750. சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அமைக்கப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்படும்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் சூரிய சக்தி பம்புசெட்டுகளை அமைக்க விரும்பும் திருவண்ணாமலை, போளூர், செங்கம், தண்டராம்பட்டு, கலசப்பாக்கம் வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், எண்.413, பசுவண்ணன் நகர், குறிஞ்சி நகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை என்ற முகவரியிலும், ஆரணி, வந்தவாசி, செய்யாறு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் எண்.67, கார்த்திகேயன் சாலை, சைதாப்பேட்டை, ஆரணி என்ற முகவரியிலும் இயங்கும் வேளாண் பொறியியல்

துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களை அணுகிப் பயன்பெறலாம் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**பெரணமல்லூரில் காணொலி திரையில் வேளாண்மை கண்காட்சி**

**ஆரணி,**

பெரணமல்லூர் வட்டாரத்தில் வேளாண்மை துறை மூலம் அட்மா திட்டத்தின்கீழ் நாக்பூர் தேசிய வேளாண்மை கண்காட்சியினை நேரலை காணொலி காட்சி திரையில் அமைக்கப்பட்டு விவசாயிகள் பார்க்குமாறு ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

பெரணமல்லூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் அட்மா திட்டத்தின் கீழ் நாக்பூர் தேசிய வேளாண்மை கண்காட்சியினை நேரலை காணொலி திரையில் பார்க்குமாறு அமைக்கப்பட்டது.

இக்கண்காட்சியில் 737 கூடங்களும், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்பு, வேளாண் பொறியியல் துறை அறுவடையின் தொழில் நுட்பங்கள் மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் நடைபெறும் கருத்தரங்குகள், விவசாயிகள், விஞ்ஞானிகள், கலந்துரையாடல் மற்றும் தொழில்நுட்பங்கள் கூடிய செயல்விளக்கங்களை நேரலை மூலம் விவசாயிகள் பார்த்து பயன்பெற்று வருகின்றனர்.

இக்கண்காட்சி பிப்ரவரி 9 முதல் நடைபெற்று வருகிறது. இன்றுடன் (பிப்ரவரி 13) நிறைவடைகிறது. விவசாயிகள் இங்கு வந்து நேரலை-காணொலியில் பார்த்து பயன்பெறலாம்.

மேலும் விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ் தெரிவித்தார்.

இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை அட்மா தொழில்நுட்ப மேலாளர் அ.சுமித்ரா, வெங்கடேசன், ஜெயராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு துவரை நடவு முறைப் பயிற்சி**

**தண்டராம்பட்டு,**

தண்டராம்பட்டு வட்டத்துக்குள்பட்ட வீரணம், வானாபுரம், மேல்முத்தானூர் ஆகிய கிராமங்களில் வேளாண்மைத்துறை சார்பாக துவரை நடவு முறை விவசாயிகளுக்கான பயிற்சி திருவண்ணாமலை மாவட்ட துணை வேளாண்மை (மத்தியதிட்டம்) இயக்குநர் கிருஷ்ணராஜ் தலைமையில் நடைபெற்றது. தண்டராம்பட்டு வட்டம் வீரணம் கலைச்செல்வி, வானாபுரம் மெய்யூரார் கண்ணன் மற்றும் மேல்முத்தானூர் செல்லமுத்து ஆகிய விவசாயிகளின் நிலங்களில் துவரை நாற்று விட்டு நடவு செய்யும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வானாபுரத்தில் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்ட மாவட்ட துணை வேளாண்மை இயக்குநர் (மத்திய திட்டம்) கிருஷ்ணராஜ் துவரை சாகுபடியில் தெரிவிக்கப்பட்ட தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடித்து அதிக மகசூல் பெற வேண்டும். உணவு தானிய உற்பத்தியில் 120 லட்சம் மெட்ரிக் டன் சாதனை அடைய வேண்டும் என்றார்.

தண்டராம்பட்டு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ.பாலா, வேளாண்மை அலுவலர் நடராஜன், துணை வேளாண்மை அலுவலர் அன்பழகன் ஆகியோர் துவரை சாகுபடியில் விதை கடினப்படுத்துதல் நேர்த்தி, தாவர பூஞ்சான் விதைநேர்த்தி, உயிர் உரநேர்த்தி, பாலித்தீன் பையைக் கொண்டு மண், மணல், தொழுஉரம் ஆகியவற்றை சமபங்குகள் கலந்து நிரம்பி 1 பைக்கு 2 விதைகள் வீதம் ஊன்றி தண்ணீர் தெளித்து 25 முதல் 30 நாள்கள் வரை வளர்க்க வேண்டும். 5 க்கு 3 இடைவெளியில் நடவு செய்து 1 மாதத்தில் நுனியை கிள்ளிவிட வேண்டும். பின்பு 35 மற்றும் 50 ம் நாளில் 2 சதவிகிதம் டிஏபி மற்றும் 1 சதவிகிதம் பொட்டாஷ் கரைசலை செடிகள் மீது தெளிக்க வேண்டும்.

இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைபிடித்து அதிக விளைச்சலை விவசாயிகள் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகளை கூறினர். பயிற்சியில் உதவி

வேளாண்மை அலுவலர்கள் கண்ணன், சுதாகர், ஜெயச்சந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி**

**போளூர்,**

சேத்துப்பட்டு வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது.

சேத்துப்பட்டு வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தலைமை வகித்து விவசாயிகளிடையே பேசும்போது, மண்புழு உரம் தயாரித்தல் பற்றியும், மண்புழு உரம் தயாரிக்கும் விவசாயிகளுக்கு 50 சதவீத பணி முடிவு மானியமாக ரூ.15 ஆயிரம் வழங்கப்படும் எனவும், இயற்கை விவசாயம் குறித்த பயன்பாடுகள் குறித்தும் விளக்கிக் கூறினார். பின்னர் மண்புழு உரம் தயாரிக்கும் விவசாயி தச்சாம்பாடியைச் சேர்ந்த இளங்கோ என்பவர் தனது அனுபவங்களைப் பற்றி விவசாயிகளுக்கு கூறினார்.

வேளாண்மை அலுவலர் அகிலாதேவி, வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் சுகுமார், உதவி வேளாண்மை அலுவவலர்கள் பாபு, கம்பை சிவன் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் தொடக்கம்**

**தருமபுரி,**

தருமபுரி அருகே நத்தம் காலனியில் புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செவ்வாய்க்கிழமை தொடங்கப்பட்டுள்ளது.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆவின் பொது மேலாளர் கொம்பையன் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை தொடங்கி வைத்தார். கறவை மாடுகள்

வளர்ப்பு, கலப்பு தீவனம் அளித்தல் மற்றும் சுகாதாரமான முறையில் பால் உற்பத்தி செய்தல் குறித்து பொதுமக்கள் விளக்கம் அளிக்கப்பட்டது. சங்கத் தலைவர் பழனிசாமி வரவேற்றார். சங்கச் செயலாளர் சங்கர் நன்றி கூறினார்.

**நவீன வேளாண் தொழில்நுட்ப கருத்தரங்கு**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் புதன்கிழமை நவீன வேளாண் தொழில்நுட்பம் குறித்த கருத்தங்கு நடைபெற்றது.

வேளாண் அறிவியல் நிலையம், தருமபுரி மாவட்ட "அட்மா' திட்டத்தின் சார்பில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கிற்கு வேளாண் துணை இயக்குநர் பி.வேணுகோபால் தலைமை வகித்தார். இதில், மாநில திட்ட வேளாண் இணை இயக்குநர் வெங்கடேசன் விவசாயத்தில் சூடோமோனாஸ், டிரைகோடெர்மா ஆகியவற்றின் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், இந்தக் கருத்தரங்கில் மண் புழு உற்பத்தி, நெகிழி நிலப்போர்வை, சொட்டுநீர் பாசன முறை, துவரையில் நாற்று நடுவது, பயிர் ஊக்கிகளின் பயன்பாடு ஆகியவை குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில், வேளாண் அறிவியல் நிலைய பேராசியர்கள் நா.அ.சரவணன், ம.சங்கீதா, பண்ணை மேலாளர் ஆர்.பன்னீர்செல்வம், ம.ஆ. வெண்ணிலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்லில் பிப்ரவரி 18-இல் பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி**

**நாமக்கல்,**

பட்டுப்புழு வளர்ப்புக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த இலவசப் பயிற்சி நாமக்கல்லில் வருகிற 18-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வருகிற 18-ஆம் தேதி காலை 9 மணிக்கு நடைபெற உள்ள இந்தப் பயிற்சி வகுப்பில், மல்பரி சாகுபடி செய்வதற்கான நிலம் தயார் செய்தல், புது ரகங்களைத் தேர்வு செய்தல், நாற்றங்கால் அமைக்கும் முறை, நடவு முறை, இடைவெளி, களை நிர்வாகம், நீர் நிர்வாகம், பூச்சி, நோய் நிர்வாகம், உர மேலாண்மை, கவாத்து செய்யும் முறை, அறுவடை முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட உள்ளது. மேலும், பட்டுப் புழு வளர்க்கும் அறை, மேலாண்மை, இளம்புழு, வளர்ந்த புழு வளர்க்கும் முறைகள், பூச்சி, நோய் மேலாண்மை, கூடு அறுவடை, விற்பனை செய்யும் முறைகள் குறித்து விரிவாக கற்றுத்தரப்பட உள்ளது.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் பங்கேற்றுப் பயிற்சி பெறலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வருகிற 17-ஆம் தேதிக்குள் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும், விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விளை நிலங்களில் இயங்கிய 10 சாய ஆலைகள் இடிப்பு**

**நாமக்கல்,**

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் அருகே விவசாய நிலங்களில் அனுமதி பெறாமல் இயங்கிய 10 சாய ஆலைகளை மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் இடித்து புதன்கிழமை அப்புறப்படுத்தினர்.

காவிரி ஆற்று நீர் மாசுபடுவதைத் தடுக்கும் வகையில் நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம், குமாரபாளையம் பகுதிகளில் அனுமதியின்றி இயங்கி வந்த 300-க்கும் மேற்பட்ட சாய ஆலைகளுக்கு கடந்த 2 மாதங்களுக்கு முன்பு சீல்

வைக்கப்பட்டது. தொடர்ந்து, விவசாய நிலங்களில் முறைகேடாக அமைக்கப்பட்ட சாய ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத சாயக் கழிவுநீர் நேரடியாக கழிவுநீர் ஓடைகள் வழியாக காவிரி ஆற்றில் கலக்கிறது.

அவ்வாறு அனுமதியின்றி விளை நிலங்களில் அமைத்து இயக்கப்படும் சாய ஆலைகளை மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் கண்டுபிடித்து இடித்து வருகின்றனர். இதன்படி, பள்ளிப்பாளையம் அருகே சமயசங்கிலி, ஆண்டிகாடு, ஆவித்திப்பாளையம் ஆகிய இடங்களில் கரும்புத் தோட்டங்களுக்கு மத்தியில் முறைகேடாக சாய ஆலைகள் இயக்கப்படுவதாக மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்களுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.இதையடுத்து, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் முருகன் தலைமையில் உதவிப் பொறியாளர் செல்வக்குமார், போலீஸார் அந்தப் பகுதிக்குச் சென்று, அனுமதியின்றி இயங்கிய 10 சாய ஆலைகளை பொக்லைன் மூலம் இடித்தனர். தவிர, அந்த ஆலைகளில் இருந்த 7 சாயமிடும் இயந்திரங்கள், 30 தண்ணீர் தொட்டிகளையும் இயந்திரம் மூலம் உடைத்து அப்புறப்படுத்தினர்.

இதுகுறித்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் முருகன் கூறியது:
இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும். விளை நிலங்களில் முறைகேடாகச் சாய ஆலைகள் இயக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட ஆலை உரிமையாளர்கள், விளைநில உரிமையாளர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**விதைப் பரிசோதனை நிலையத்தில் அலுவலர் ஆய்வு**

**கரூர்,**

கரூர் திண்ணப்பா நகரில் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் கீழ் செயல்படும் விதைப் பரிசோதனை நிலையத்தை, திருச்சி விதைப் பரிசோதனை அலுவலர் இரா. ரவி அண்மையில் ஆய்வு செய்தார்.

அப்போது, விவசாயிகளிடமிருந்தும், உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் விதைகளை முறையாக பதிவேடுகளில் பதிவுசெய்வது, விதைப் பரிசோதனை,

ஈரப்பதம், விதை சுத்தம் போன்றவற்றை அவர் ஆய்வு செய்தார். மேலும், விதைப் பரிசோதனை முடிவுகள் உடனுக்குடன் உரியவர்களுக்கு அனுப்பப்படுகிறதா என்பதையும் அவர் ஆய்வு செய்தார். பிறகு அவர் கூறியது:

விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் இப்பரிசோதனை நிலையத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைக் குவியலில் இருந்து சுமார் 100 கிராம் மாதிரி எடுத்து ஒரு பையில் இட்டு, அத்துடன் ஒரு துண்டு சீட்டில் பயிர், ரகம், குவியல் எண் ஆகியவற்றை எழுதிவைக்க வேண்டும்.பிறகு, அத்துடன் தங்களின் அஞ்சல் முகவரியுடன் கூடிய முகப்பு கடிதத்தையும் வைத்து, ஒரு விதை மாதிரிக்கு ஆய்வுக் கட்டணமாக 30 ரூபாயுடன், வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், இரண்டாவது குறுக்குத்தெரு, திண்ணப்பா நகர், காந்திகிராமம், கரூர்-639004 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும் என்றார்.

## நாக்பூரில் தேசிய வேளாண் கண்காட்சி:பெரம்பலூர் விவசாயிகள் 40 பேர் பங்கேற்பு

**பெரம்பலூர்,**

மகாராஸ்டிர மாநிலம், நாக்பூரில் நடைபெறும் தேசிய வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 40 விவசாயிகள் பங்கேற்றுளனர்.

இதுகுறித்து வேளாண் அலுவலகம் தெரிவித்துள்ளது:

தேசிய வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில், பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து நெல், பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், மஞ்சள், மரவள்ளி, பயிர் வகைகள், கீரை வகைகள் உள்ளிட்டவற்றில் திறம்பட சாகுபடி செய்துவரும் விவசாயிகள், ஒன்றியத்திற்கு 10 பேர் என மாவட்டத்தில் 40 பேர் தேர்வு செய்யப்பட்டு வேளாண்மைத் துறை அலுவலர் துணையுடன் சென்றுள்ளனர்.

இந்த விவசாயிகள் நாக்பூரில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் கண்காட்சியில் பங்கேற்று, சாகுபடிக்கான வழிமுறைகள், வேளாண் மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்கள், நவீன உத்திகள், அரசால் வழங்கப்படும் நிதியுதவி, உற்பத்திப் பொருளை தரம்பிரிப்பது, விற்பனை செய்வது உள்ளிட்ட சாகுபடி முறைகளை நேரில் அறிந்து குறிப்பெடுத்து வர உள்ளனர்.

இந்த விவசாயிகளைக் கொண்டு, வட்டாரம் வாரியாக அனைத்து விவசாயிகளுக்கும் வட மற்றும் தென்னிந்திய

சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

## ராபி பருவ பயிர்களுக்கு காப்பீடு செய்ய ஆட்சியர் அழைப்பு

**தூத்துக்குடி,**

தூத்துக்குடி மாவட்டத்தில் ராபி பருவ பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து பயன்பெற முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர் காப்பீடு தொடர்பாக ஆட்சியர் ம. ரவிக்குமார் தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியது:

தூத்துக்குடி மாவட்டத்தில் 2013-14ஆம் ஆண்டுக்கான ராபி பருவத்துக்கு (அக்டோபர் முதல் மார்ச் வரை) திருத்தியமைக்கப்பட்ட வேளாண் காப்பீட்டுத் திட்ட அறிவிப்பு தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து விதமான தவிர்க்க இயலாத இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு குறுவட்டம் (பிர்கா) அடிப்படையில் இத்திட்டம் காப்பீடு வழங்குகிறது.

குத்தகைதாரர்கள் உள்பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். வங்கிக் கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

தூத்துக்குடி மாவட்டத்தைப் பொருத்தவரையில் 2013-14 ராபி பருவத்துக்கு உளுந்து, பாசிப்பயறு, மக்காச்சோளம், நெல் (கோடை பருவம்), எள், கரும்பு, வாழை, மிளகாய் பயிர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

2013-14 ஆம் ஆண்டில் டிசம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை விதைப்பு, நடவு செய்யப்படவுள்ள நெல் பயிருக்கும், அக்டோபர் 2013 முதல் 2014 வரை விதைப்பு செய்யப்பட்டுள்ள அல்லது விதைப்பு செய்ய இருக்கும் மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, எள் ஆகிய பயிர்களுக்கு பிப் 28-ஆம் தேதி வரை பிரீமியம் செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம்.

மொத்த பிரீமியம் தொகையில் பயிர்களைப் பொறுத்து 40 சதவிகிதம் முதல் 75 சதவிகிதம் வரை அரசு மானியம் உள்ளது.

விவசாயிகள் அரசு மானியத் தொகை கழித்தது போக நிகர பிரீமியம் தொகையாக ஒரு ஏக்கருக்கு நெல்லுக்கு ரூ. 278, உளுந்து ரூ. 127, பாசி பயறு ரூ. 134, மக்காச்சோளம் ரூ. 432, எள் ரூ. 315, கரும்பு ரூ. 1,488, வாழை ரூ. 8,811, மிளகாய் ரூ. 452 செலுத்த வேண்டும். இந்த பிரீமியம் தொகை கடன் பெறும், பெறாத விவசாயிகளுக்குப் பொதுவானதாகும்.

கடன் பெறாத விவசாயிகள் பிரீமியம் தொகை செலுத்தும் போது உரிய விண்ணப்பத்தினை நேரடியாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் போன்ற அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் பெற்று பூர்த்தி செய்து வழங்க வேண்டும்.

விண்ணப்பத்துடன், அடங்கல் நகல் (கிராம நிர்வாக அலுவலர் சான்றுடன்), பிரீமியத் தொகை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ, சாகுபடியாளரின் வங்கி கணக்குப் புத்தக முதல் பக்க ஒளிநகல் (புகைப்படத்துடன்) அளித்து பயிர் காப்பீடு செய்து பயன் பெறலாம் என்றார்.

கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் பாண்டியன், முதன்மை வங்கி மேலாளர் இளமாறன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பாபநாசம் அணை நீர்மட்டம் 65 அடியாகக் குறைந்தது**

**திருநெல்வேலி,**

பாபநாசம் அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வரும் நிலையில் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டது. புதன்கிழமை பாசனத் தேவைக்காக மணிமுத்தாறு அணையில் இருந்து கூடுதலாக 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவ மழை சரிவர பெய்யாததால் திருநெல்வேலி மாவட்டத்தில் பிரதான அணைகள் நிரம்பவில்லை. இதனிடையே கடந்த ஜனவரி மாதம் பெய்த மழையால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. இந்த அணைகள் மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

இவ்விரு மாவட்டங்களில் பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்கு பாபநாசம் அணையில் இருந்து விநாடிக்கு 1200 கனஅடி திறக்கப்பட்டது.

அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து புதன்கிழமை 65.15 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 495 கனஅடி நீர்வரத்து இருந்தது. நீர்மட்டம் குறைந்து வருவதால் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு புதன்கிழமை 673 கனஅடியாகக் குறைக்கப்பட்டது.

பிசான சாகுபடி அறுவடைக்கு இன்னும் ஒரு மாதத்துக்கு தண்ணீர் வழங்க வேண்டிய நிலையில், தேவையைக் கருத்தில் கொண்டு மணிமுத்தாறு அணையில் இருந்து கூடுதலாக 500 கனஅடி திறக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அணையின் நீர்மட்டம் 80.68 அடியாக இருந்தது. விநாடிக்கு 30 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் பெருங்கால் மதகு பாசனத்துக்கு 30 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது.

சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 69.22 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 41.10 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 32.25 அடியாகவும், அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 42.00 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 24.76 அடியாகவும் இருந்தது. கடனாநதி, ராமநதி அணைகளில் இருந்து விநாடிக்கு 25 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கருப்பாநதி அணையில் இருந்து 5 கனஅடியும், அடவிநயினார் அணையில் இருந்து 20 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் உள்ள பிரதான அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. ஜூன் மாதத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கினால்தான் அணைகளுக்கு நீர்வரத்து கிடைக்கும்.

அதுவரை இவ்விரு மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, பாபநாசம் அணையில் நீரை சேமித்து வைக்கும் வகையில், அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவைக் குறைத்து மணிமுத்தாறு அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

## பல்லுயிர் பாதுகாப்பு விழிப்புணர்வு

**புதுச்சேரி,**

புதுவை தாவரவியல் பூங்காவில் பல்லுயிர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

புதுவையில் உலக நீர் நாள் விழாவை முன்னிட்டு, வேளாண்மைத் துறை சார்பில் மரங்கள், பறவைகள் உள்ளிட்ட பல்லுயிர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமில் தாவரவியல் பூங்கா வேளாண் அலுவலர் சங்கர்தாஸ் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மரங்களின் பங்களிப்பு குறித்து பேசினார்.

தாவரவியல் பூங்காவில் உள்ள பழமையான மரங்கள் குறித்தும், பல்வேறு பகுதியிலிருந்து பறவைகள் வந்து தஞ்சமடைவது குறித்தும், அதன் நன்மைகள் குறித்தும் முகாமில் விளக்கினர்.

இதனையடுத்து, மாணவர்களுக்கான போச்சுப் போட்டிகள் நடைபெற்றன.

**காவிரி பாசனப் பகுதிகளில் ரூ. 334 கோடியில் திட்டங்கள்**

**பெங்களூரு,**

கர்நாடகத்தில் காவிரி பாசனப் பகுதிகளில் ரூ. 334 கோடியில் நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த அந்த மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

பெங்களூரு விதான செப்தாவில் முதல்வர் சித்தராமையா தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கர்நாடக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து சட்டத் துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா கூறியது:

காவிரி பாசனப் பகுதிகளில் ரூ. 333.77 கோடியில் நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

சிக்கண்டி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், கபினி அணியில் இருந்து மைசூர்,

எச்.டி.கோட்டே, நஞ்சன்கூடு ஆகிய பகுதிகளில் உள்ள 23 ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் மிர்ஜா கால்வாய், நுகு அணை கால்வாய், ஹொன்னூர் இடதுகரை கால்வாய், தரகா வலதுகரை கால்வாய்கள் மேம்படுத்தப்படும்.

இதுதவிர, ராமசாமி அணையின் கால்வாய்களும் மேம்படுத்தப்படும். காவிரி நதிநீர்ப் பங்கீடு விவகாரத்தில், கர்நாடக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காடும் மூத்த வழக்குரைஞர் ஃபாலிநாரிமானிடம் கலந்தாலோசித்த பிறகே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல, எத்தினஹொளே நீர்ப்பாசனத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

எத்தினஹொளே, இதர நதிகளில் இருந்து கோலார், சிக்பளாப்பூர், தும்கூர், பெங்களூரு ஊரகம் போன்ற சமவெளிப் பகுதிக்கு ரூ. 12,912.36 கோடியில் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கான இரண்டாம் கட்டப் பணியைச் செயல்படுத்தவும் அமைச்சரவையில் ஒப்புதல் அளித்துள்ளது. வெகுவிரைவில் இதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காதலர் தினம்: ரூ.40 கோடிக்கு கொய் மலர் ஏற்றுமதி**




**புதுடில்லி**: நாளை, காதலர் தினம் கொண்டாடப்படுவதையொட்டி, இந்தியா வில் இருந்து, 40 கோடி ரூபாய் மதிப்பில், கொய் மலர் ஏற்றுமதியாகும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், பெங்களூரு, புனேவில் இருந்து மட்டும், தலா, 60 லட்சம் கொய் மலர்கள் ஏற்றுமதி செய்யப்படும் என, இந்திய தாவர வளர்ப்பு வல்லுனர்கள் சங்கம் தெரிவித்து உள்ளது.

இரு மடங்கு உயரும் : இந்தியாவில் இருந்து, ஐரோப்பிய நாடுகள் மற்றும் வளைகுடா நாடுகள், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இத்தாலி, கிரீஸ், சுவீடன், நியூசிலாந்து நாடு களுக்கு கொய் மலர்கள் ஏற்று மதியாகின்றன. நடப்பாண்டு, ரஷ்யா, லெபனான் நாடுகளும், இந்திய கொய் மலர்களுக்கு, புதிய சந்தை

வாய்ப்பை வழங்கியுள்ளன. கடந்த, 2011 - 12ம் நிதியாண்டில், இந்தியாவின் மலர் ஏற்றுமதி, முந்தைய நிதியாண்டை விட, 23.3 சதவீதம் அதிகரித்து, 5.90 கோடி டாலராக காணப்பட்டது. இது, வரும், 2014 - 15ம் நிதியாண்டில், இரு மடங்கு உயரும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இந்திய ரோஜாக்களின் ஏற்று மதியில், நியூசிலாந்தின் பங்களிப்பு, 50 சதவீதமாக உள்ளது. ஐரோப்பாவில், வரலாறு காணாத பனிப் பொழிவு காரணமாக, ரோஜா உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், இந்தியாவின் நீண்ட தண்டுள்ள ரோஜாக்களின் ஏற்றுமதி, 20 - 25 சதவீதம் அதிகரிக்கும் என, தெரிகிறது. இருந்தபோதிலும், சர்வதேச மலர் சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு, 2 சதவீதம் என்ற அளவிற்கே உள்ளது. இந்த ஆண்டு, சீனாவில், ரோஜா சாகுபடி பாதிக்கப் பட்டுள்ளது; இதனால், உலக நாடுகளின் கவனம், இந்தியா பக்கம் திரும்பி உள்ளது. இதையடுத்து, மலர் சாகுபடியில், தமிழகத்தில், முதல் இடத்தில் உள்ள, ஓசூரில், ரோஜா ஏற்றுமதி, களை கட்ட துவங்கியுள்ளது.

ஓசூரில் இருந்து ரோஜா இதுகுறித்து, ஓசூர் விவசாயிகள் கூறியதாவது: ஓசூரில், ஆறு மாதத்துக்கு முன்,பலத்த சூறாவளி காற்று வீசியதால், ரோஜா சாகுபடி பாதிக்கப்பட்டு, உற்பத்தி குறைந்தது. இருந்த போதிலும், சீனா, எத்தியோபியாவில், அதிகளவில், உற்பத்தி குறைந்துள்ளதால், ஓசூர் ரோஜா தேவை அதிகரித்துள்ளது.

காதலர் தினத்திற்காக, ஓசூரில், முன்னணி ரோஜாக்கள், 10 - 40 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இம்மலர்கள் விளையும், ஓசூர் சுற்றியுள்ள கிராமங்களில், மின்வெட்டு தளர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## "மதுரை ஆவின்' நூதன திட்டம்

**மதுரை:** பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், "ஆ' (பசு)வின் எண்ணிக்கையைப் பெருக்க, தமிழகத்தில் முதன்முறையாக புதிய முயற்சியை, மதுரை ஆவின் எடுத்து வருகிறது. மதுரை ஆவின் தினமும் சராசரியாக, 85 ஆயிரம்

லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகிறது. பால் கொள்முதலை அதிகரிக்க, கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம், தாது உப்புக்களை வழங்குவதுடன், டாக்டர்களை நியமித்து, மருத்துவ உதவிகளையும் மேற்கொள்கிறது. தற்போது தமிழகத்திலேயே புதிய முயற்சியாக மதுரை ஆவின், நவீன, செயற்கை கருவூட்டல் முறையில், பசுக்கன்றுகளை மட்டும் அதிகளவில் உற்பத்தி செய்யவும் முயற்சி மேற்கொண்டுள்ளது. குஜராத் மாநிலம் சபர்மதியிலும், பஞ்சாப் மாநிலத்திலும் இம்முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. பஞ்சாபில், வெளிநாடுகளில் இருந்து மாடுகளின் விந்தணுவை இறக்குமதி செய்து,செயற்கை முறையில் கருவூட்டி, அதிகளவு பசுக்களை உருவாக்கின்றனர். இதற்கு 50 சதவீதம் அரசு மானியமும் வழங்கப்படுகிறது. அதேபோல மதுரையிலும் செய்ய, ஆவின் நிறுவனம், நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. கூட்டத்தின் முடிவு தற்போது இத்துறையின் கமிஷனர் அலுவலகத்திற்கு ஒப்புதல் பெற அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காளைகள், பசுக்களுடன் இனவிருத்திக்காக சேரும்போது, அதன் விந்துவில் உள்ள, "எக்ஸ்' அணுவும், பசுவின் கருமுட்டையில் உள்ள "எக்ஸ்' அணுவுடன் இணைந்தால், பெண் கன்று பிறக்கிறது. அதேசமயம், "எக்ஸ்' அணுவும், "ஒய்' அணுவும் இணைந்தால் ஆண் கன்று பிறக்கிறது. செயற்கை முறை கருவூட்டலின் போது, "எக்ஸ்' அணுவும், "ஒய்' அணுவும் இணையும் வகையில் விஞ்ஞானபூர்வமாக சேர்க்கை நடைபெறும். இதற்கு உதவும் "விந்து ஊசி'யை, சபர்மதியில் இருந்து பெற்று, விவசாயிகளுக்கு வழங்கலாம் என ஆவின் முடிவு செய்துள்ளது. இந்த ஊசிக்கான தொகையில் 50 சதவீதத்தை அரசு மானியமாக வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இம்முறையில் 90 சதவீத வெற்றி கிடைக்க வாய்ப்புள்ளதாக கால்நடை மருத்துவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## குறைந்தது தேங்காய் விளைச்சல் கொப்பரை விலை அதிகரிப்பு : தென்னை விவசாயத்தில் மீண்டும் ஆர்வம்

**கீழக்கரை:** ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டில் மழை பெய்யாததால் தேங்காய் விளைச்சல் குறைந்தது. தேவை அதிகரிப்பால் கொப்பரை பருப்பு விலை 47 லிருந்து 78 ரூபாயாக உயர்ந்துள்ளது.

கீழக்கரை, காஞ்சிரங்குடி, பெரியபட்டினம், தாமரைக்குளம், ரெகுநாதபுரம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பிரதான தொழிலாக தென்னை விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

இரண்டு ஆண்டுகளாக, மழையின்றி விளைச்சல் வெகுவாக குறைந்துவிட்டது. கடந்தாண்டு வரை கொப்பரை பருப்பு கிலோ 47 ரூபாய்க்கு கொள்முதல் செய்த மொத்த வியாபாரிகள் தற்போது தேவை அதிகரிப்பால், 78 ரூபாய்க்கு வாங்க முன் வந்துள்ளனர். கடந்தாண்டு விலை இல்லாததால் மரங்கள் பராமரிப்பில் விவசாயிகள் கவனம் செலுத்தவில்லை.

பெரியபட்டினம் தென்னை விவசாயி மாலிக் கூறியதாவது: விலைவாசி உயர்ந்து வரும் நிலையில் தேங்காய் விலையில் ஏற்பட்ட பெரும் சரிவால், ஏராளமானோர் தென்னை விவசாயத்தில் ஆர்வம் செலுத்தவில்லை. இந்தாண்டு மழை இல்லாததால், தேங்காய் வடிவம் மாறி காய்ப்பு குறைந்து விட்டது.

10ஆயிரத்திற்கும் அதிகமான காய்கள் பறித்த தோப்புகளில் தற்போது 3 ஆயிரம் காய்கள் கூட காய்ப்பது இல்லை.

உரம், மருந்தடிப்பு, வெட்டுக்கூலி, உரி கூலி இப்படி கூடுதல் செலவினங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டி உள்ளது. தற்போது, கொப்பரைக்கு நல்ல விலை கிடைத்தும் காய் இல்லை. கொப்பரை விலையேற்றம் காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை சாகுபடியில் விவசாயிகள் மீண்டும் ஆர்வம் செலுத்த துவங்கியுள்ளனர். தேங்காய் கிலோ 18 முதல் 22 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கோடை மழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் தென்னங்கன்றுகள் ஆயிரக்கணக்கில் நடப்பட்டுள்ளன. நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து விடும் என்ற அச்சமும் விவசாயிகளிடையே உள்ளது, என்றார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

**கம்மாபுரம்** : கம்மாபுரம் வட்டார வேளாண் விரிவாக்க மையம் சார்பில் விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்டது. கம்மாபுரம் அடுத்த கோபாலபுரம் கிராமத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, உதவி இயக்குனர் சம்பத்குமார் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் சுதமதி, துணை வேளாண் அலுவலர் பரமசிவம் முன்னிலை வகித்தனர். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சந்திரமோகன் துவக்கி வைத்தார். உதவி வேளாண் அலுவலர்கள் ராமசாமி, செங்குட்டுவன், சித்தராங்கி, தனசேகரன் பங்கேற்றனர். அதில், நெல், வேர்க்கடலை, உளுந்து, பச்சைப்பயறு விதைகளை நவீன முறையில் உற்பத்தி செய்வது குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், மண் மாதிரி, விதை நேர்த்தி, பூச்சி கட்டுப்பாடு, எலி ஒழிப்பு குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. அதேபோன்று, பெரியகோட்டுமுளை, கோட்டகம் கிராமங்களிலும் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

## தோட்டக்கலை பயிர் சாகுபடி பரப்பளவு மாவட்ட விவசாயிகளுக்கு கைகொடுப்பு

**ராமநாதபுரம்**: ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்தாண்டை விட, தோட்டக்கலை பயிர் சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதனால் சாகுபடி பரப்பளவு 1500 எக்டேர் அதிகரித்துள்ளது. விழா மற்றும் முகூர்த்த நேரங்களில் காய்கறிகளுக்கு "டிமாண்ட்' ஏற்படுவதால் விவசாயிகளுக்கு, கூடுதல் வருமானம் கிடைத்து வருகிறது.

ராமநாதபுரத்தில் இருந்து நயினார்கோவில் செல்லும் ரோட்டில் பாண்டியூர், சின்ன அக்கிரமேசி, சிறகிகோட்டை, மஞ்சகொள்ளை மற்றும் பெரியபட்டினம், சங்கந்தியான்வலசை, ரெகுநாதபுரம், புதுக்குடியிருப்பு வலசை, மஞ்சூர் உட்பட பெரும்பாலான கிராமங்களில் சமீபகாலமாக தக்காளி, கத்தரி, முள்ளங்கி, பாகற்காய், பீர்க்கை, அவரை, பூசணி, கொத்தமல்லி மற்றும் கீரை வகைகள் அதிகளவில் விவசாயிகள் சாகுபடி செய்துஉள்ளனர். ஒவ்வொரு விவசாயியும்

குறைந்தது, ஒரு எக்டேர் முதல் 4 எக்டேர் வரை, சாகுபடி செய்துள்ளனர். நான்கு மாதங்களில் பயன்தரும் தரக்கூடிய காய்கறி சாகுபடியில், மாதந்தோறும் 20 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைப்பதால், பெரும்பாலான விவசாயிகள் இதன் மூலம் சத்தமில்லாமல் சம்பாதித்து வருகின்றனர். சிறகிகோட்டை, விவசாயி என்.குணா: மஞ்சள் கொள்ளையில் 2 ஏக்கரில் கத்தரிக்காய் சாகுபடி செய்துள்ளேன். தற்போது, 50 நாட்கள் செடியாக வளர்ந்துள்ளது. நிலம் சீரமைப்பு, நடவு, தண்ணீர் பாய்ச்சல், களை எடுப்பு, உரமிடுதல் என, பல பணிகளுக்காக ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தேன். நடவு செய்த 45 நாட்களுக்கு பிறகு, விளைச்சலுக்கு வந்துவிடும். தினமும் 400 கிலோ வரை காய் பறிக்கப்படுகிறது. 40 கிலோ கொண்ட ஒரு மூடை, "டிமாண்டை' பொறுத்து 500 முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. பராமரிப்பு மூலம் காய்ப்பு திறன் அதிகரிக்கும். காளையார்கோவில், ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளில் இருந்து மொத்த வியாபாரிகள் வந்து வாங்கி செல்கின்றனர். செலவு போக, மாதந்தோறும் ரூ.20 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை போக, மீத காய்களை ராமநாதபுரம் சந்தைகளில் தினமும் விற்கிறோம். இதன் மூலம் தினமும் 600 ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது, என்றார்.

"அட்மா' திட்ட தொழில்நுட்ப வல்லுனர் ஏகாம்பரம்: விவசாயி களுக்கு புடலை, பீர்க்கை, பூசணி, முள்ளங்கி விதைகளை, 100 சதவீதம், வெண்டை விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. கடந்தாண்டு, 1764 எக்டேரில் நடந்த கொத்தமல்லி சாகுபடி, நடப்பாண்டு 2 255 எக்டேராக அதிகரித்துள்ளது. கத்தரிக்காய்- 65, தக்காளி- 18, வெண்டை- 49, முண்டு மிளகாய் 17 ஆயிரத்து 673 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு 4,500 எக்டேரில் நடந்த தோட்டக்கலை பயிர் சாகுபடி, தற்போது 6000 எக்டேராக அதிகரித்துள்ளது. விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும், பூச்சிகள் கட்டுப்படுத்தும் முறை குறித்து ஆலோசனை வழங்கி வருகிறோம், என்றார்.

## கிளியாற்றில் தடுப்பணை கட்டும் பணி துவக்கம்

**காஞ்சிபுரம்** : மதுராந்தகம் அருகே, கிளியாற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் தடுப்பணைப் பணிகளை, ஒன்பது மாதங்களுக்குள் முடிக்க, பொதுப் பணித் துறையினர் திட்டமிட்டு உள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பகுதியில் உற்பத்தியாகும் கிளியாறு, மதுராந்தகம் வழியாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் நுழைந்து, மதுராந்தகம் ஏரியை நிரப்பி, ஈசூர் அடுத்துள்ள பாலாற்றில் கலக்கிறது. இந்த ஆற்றின் தண்ணீரை நம்பி, கே.கே.புதுார், முன்னுத்திகுப்பம் உள்ளிட்ட கிராமங்களில், நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் பயிர் செய்யப்படுகிறது.கிளியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும் என, அப்பகுதி விவசாயிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர். இதனைத் தொடர்ந்து, கிளியாற்றின் தடுப்பணை கட்ட, உலக வங்கி கடனுதவியுடன், தமிழக அரசு கடந்த, 2013 - 14ம் ஆண்டு, 4.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது. இந்த நிதியைக் கொண்டு, மதுராந்தகம் அடுத்த கே.கே.புதுார் பகுதியில் கிளியாற்றின் குறுக்கே, 140 மீட்டர் நீளத்தில் தடுப்பணை கட்டும் பணி, கடந்த ஜனவரி முதல் நடைபெற்று வருகிறது. இதுகுறித்து, பொதுப் பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது: கே.கே.புதுார் அருகே கிளியாற்றின் குறுக்கே கட்டப்படும் தடுப்பணையில், தண்ணீர் சேகரிப்பதன் மூலம், 250 ஏக்கர் விவசாய நிலங்கள் நேரடியாக பாசன வசதி பெறும். தடுப்பணை கட்டுமானப் பணிகளை, ஒன்பது மாதங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## உதவி விதை அலுவலருக்கு பணி நிறைவு பாராட்டு விழா

**தியாகதுருகம்** : தியாகதுருகம் வேளாண் உதவி விதை அலுவலருக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடந்தது.

தியாகதுருகம் வேளாண் துறை அலுவலகத்தில் உதவி விதை அலுவலராக பணியாற்றிய தேவராஜீ கடந்த மாதத்துடன் ஓய்வு பெற்றார். இவருக்கு பணி

நிறைவு பாராட்டு விழா நடந்தது.
வேளாண் உதவி இயக்குனர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். உதவி வேளாண் அலுவலர் சங்க மாநில பொருளாளர் முத்து, மாவட்ட தலைவர் செந்தில்குமார், செயலாளர் சபாபதி முன்னிலை வகித்தனர். துணை வேளாண் அலுவலர் தமிழரசன் வரவேற்றார்.
வேளாண் உதவி இயக்குனர் கோவிந்தன், துணை பி.டி.ஓ.,க்கள் கொளஞ்சிவேல், அறிவழகன், உதவி வேளாண் அலுவலர்கள் ஞானவேல், பழனிவேல், சிவக்குமார், சத்துணவு சங்க ஒன்றிய தலைவர் தங்கவேல் வாழ்த்தி பேசினர். உதவி வேளாண் அலுவலர் தண்டபாணி நன்றி கூறினார்.

**மாடுகளுக்கு பரவும் பித்தப்பை நோய் : உயிருக்கு உலை வைக்கும் உண்ணிகள்**

**கோவை** : மாடுகளின் புறத்தோலில் சவ்வு போல் ஒட்டிக்கொள்ளும் உண்ணிகள் மற்றும் பேன்களால், பித்தப்பை நோய் ஏற்பட வாய்ப்புள்ளது என ஆய்வில் தெரியவந்துள்ளது.
உண்ணிகள் மாடுகளின் ரத்தத்தை உறிஞ்சுவதுடன், நோய் கிருமிகளை எளிதில், ரத்தத்தோடு பரப்புகின்றன. ஊசிகள், கொம்பு நீக்கும் கருவிகள், ஆண்மை நீக்கம் செய்யும் கருவிகள், அடையாள குறியிடும் கருவிகளாலும் பித்தப்பை நோய் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.
பித்தப்பை நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு ரத்த சோகை, எடை குறைவு, மூச்சுத் திணறல் ஏற்படும். உரிய சிகிச்சை அளிக்காவிட்டால், காய்ச்சல் அதிகமாகி, மூக்கு பகுதி காய்ந்து சோர்வடையும். பின், மஞ்சள் காமாலை ஏற்பட்டு மாடுகள் இறக்கும் அபாயம் உள்ளது. பண்ணை முறையில் மாடு வளர்க்கும்போது, ஒரு மாட்டுக்கு பித்தப்பை பாதிப்பு ஏற்பட்டால், மற்ற மாடுகளையும் விரைவில் தாக்க வாய்ப்புள்ளது. இதற்கு, மாடுகளின் புறத்தோலில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து, உண்ணிகளை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.
கால்நடைத்துறை அதிகாரிகள் கூறுகையில், 'சுகாதாரமற்ற பராமரிப்பு முறைகளாலும், உண்ணிகள் உற்பத்தியாகி, மாடுகளை தாக்குகின்றன.

உண்ணிகளால், மாடுகளுக்கு பித்தப்பை நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. உண்ணிகளை கட்டுப்படுத்த 'குளோரோ டெட்ராசைக்ளின்' எனும் கிருமிநாசினி மருந்துகளை, மாடுகளின் எடைக்கேற்ப குறிப்பிட்ட அளவு உட்கொள்ள செய்தல் அவசியம்' என்றனர்.

## மாங்காய் விளைச்சல் அதிகரிப்பது எப்படி?

**அன்னூர்** : 'அடர்நடவு முறையை பின்பற்றினால், மாங்காய் விளைச்சல் மூன்று மடங்கு உயரும்' என தோட்டக் கலை துறை பயிற்சி வகுப்பில் தெரிவிக்கப்பட்டது. தேசிய தோட்டக்கலை இயக்கத்தில், 50 விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு பொகலூர் ஊராட்சி, முடுக்கன் துறையில் நடந்தது. தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜஸ்ரீ பேசியதாவது:

இந்தியாவில், ஒரு எக்டேருக்கு எட்டு முதல் ஒன்பது டன் மாங்காய் விளைச்சல் கிடைக்கிறது. இஸ்ரேல் மற்றும் தென் ஆப்ரிக்காவில் 16 முதல் 18 டன் வரை விளைச்சல் எடுக்கின்றனர். நம் நாட்டில் விளைச்சல் குறைவுக்கு முக்கிய காரணம், மரங்களுக்கு இடையில் அதிக இடைவெளி விடுவதுதான். அடர் நடவு முறையில், 10க்கு 5 மீ., அல்லது 5க்கு 5 மீ., இடைவெளியில் மா நடவு செய்தால் விளைச்சல் அதிகரிக்கும். வழக்கமான முறையில் நடவு செய்தால், ஒரு எக்டேரில் 100 செடி மட்டும் நடவு செய்ய முடியும். எட்டு முதல் 10 டன் விளைச்சல் மட்டும் கிடைக்கும். அடர் நடவு முறையில் 5 மீ.,க்கு 5 மீ., இடைவெளியில், 400 செடிகள் நட முடியும். 15 முதல் 20 டன் விளைச்சல் பெறலாம். இதே 3க்கு 2 மீ., இடைவெளியில் 1,670 செடி நடலாம். ஒரு எக்டேருக்கு 25 முதல் 30 டன் விளைச்சல் பெறலாம்.

விளைச்சல் மூன்று மடங்கு அதிகரிக்கும். இவ்வாறு, ராஜஸ்ரீ பேசினார். விவசாய அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் சகாதேவன் பேசுகையில், 'பயிர்களுக்கு பாதகமான அதிகப்படியான சூரிய ஒளி, அதிக வெப்பம், பூச்சி நோய்களிலிருந்து செடிகளை பசுமைக்குடில் பாதுகாக்கிறது.

பசுமைக்குடிலில் தக்காளி, வெள்ளரி, முட்டைக்கோஸ், பீன்ஸ், மிளகாய் மற்றும்

கிழங்கு வகைகளை பயிரிடலாம். சந்தையில் பருவமில்லாத காலத்தில் வரும் விளை பொருட்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. 'பசுமைக்குடிலால் ஆண்டுக்கு பல லட்சம் ரூபாய் வருமானம் பெறலாம்' என்றார். விவசாயிகளை பசுமைக்குடில், மா அடர் நடவு செய்யப்பட்ட தோட்டம் மற்றும் குழி தட்டு நாற்றங்கால் வயல்களுக்கு அழைத்து சென்று அதிகாரிகள் விளக்கினர். உதவி வேளாண் அலுவலர்கள் லட்சுமிபதி, சண்முகம் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## 'விவசாயிகள் தென்னங்கன்றுகளை தேர்வு செய்வதில் கவனம் தேவை'

**ஆனைமலை** : “தென்னை விவசாயிகள் தங்களின் நீர் வசதிக்கு ஏற்ற ரகங்களையும், அதிக காய்ப்பு தன்மையுள்ள செயற்கை முறையில் ஒட்டு உற்பத்தி செய்யப்பட்ட ரகங்களை பயிரிட்டு பலனடைய வேண்டும்,” என விதை ஆய்வு துணை இயக்குனர் நடேசன் கூறினார்.

பொள்ளாச்சி, கிணத்துக்கடவு , உடுமலை தாலுகாக்கள் மற்றும் ஆனைமலையை சுற்றியுள்ள பகுதிகளில் 3 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹெக்டர் பரப்பளவில் தென்னை சாகுபடி நடக்கிறது. இதில் தமிழகத்தின் தென்னை நகரம் என அழைக்கப்படும் பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில், ஆண்டுதோறும் புதிதாக சுமார் 200 ஏக்கர் பரப்பளவுக்கு புதிதாக தென்னங்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது. விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் கூறியதாவது: நீண்டகால பயிரான தென்னையில், நெட்டை, நெட்டை-குட்டை மற்றும் குட்டை - நெட்டை என பல ரகங்கள் உள்ளன. தண்ணீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் வறட்சியை தாங்கும் நெட்டை ரகங்களான அரசம்பட்டி நெட்டை ரகங்களை பயிரிடலாம்.

தண்ணீர் நிறைவாக நிலங்களிலும், ஆற்று படுகைகளில் உள்ள நிலங்களிலும்,நெட்டை-குட்டை மற்றும் குட்டை-நெட்டை ரகங்களை பயிரிடலாம். இது தேங்காய் மற்றும் இளநீர் உற்பத்திக்கு ஏற்றவையாகும். தற்போது விவசாயிகளிடையே இயற்கையான மகரந்த சேர்க்கை அல்லது கட்டுபாடான செயற்கை மகரந்த சேர்க்கை செய்யப்பட்ட ஒட்டு கன்றுகளில் எதை தேர்வு செய்வது என்ற குழப்பம் நிலவுகிறது.

இயற்கை முறையில் மகரந்த ஒட்டு சேர்க்கப்பட்ட குட்டை-நெட்டை ஒட்டுகளில் காய்க்கும் தன்மையிலும், காய்களிலும் பெரியளவில் வேறுபாடு இருக்கும்.
காய் எந்த நிறத்தில் இருக்கும், எந்த அளவில் இருக்கும் என்பது காய்த்த பின்புதான் தெரிய வரும். ஆனால் செயற்கை முறையில் ஒட்டு மேற்கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகள் கிட்டதட்ட 90 சதவீதம் காய்கள் ஒரே தரமாக இருக்கும். மரத்திற்கு மரம் காய்களின் உருவத்திலும் அளவிலும் வேறுபாடு இருக்காது. காய்ப்புத்தன்மையும் சீராக இருக்கும். எனவே செயற்கை முறையில் ஒட்டு உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளை மட்டுமே வாங்கி நடவு மேற்கொள்ள வேண்டும்.
மேலும் ஒட்டு கன்றுகள் வாங்கும்பொழுது அதன் தாய்,தந்தை மரத்தின் காய்ப்பு தன்னையை தெரிந்து வாங்க வேண்டும். நெட்டைரக கன்றுகள் வாங்கும் பொழுது அதன் தாய் மர தேர்வு நன்றாக செய்யப்பட்டுள்ளதா என்று தெரிந்துகொண்டு வாங்கி நடவு மேற்கொண்டால் பிற்காலத்தில் நல்ல தோப்பு அமையும்.இவ்வாறு அவர் கூறினார்.

## பச்சை பயறுக்கு இலவச டி.ஏ.பி., உரம்

**திருவள்ளூர்** : கோடை பருவத்தில் பயிரிடப்பட்டு உள்ள பச்சைப் பயறுக்கு, 25 கிலோ டி.ஏ.பி., உரம் இலவசமாக வழங்கப்பட உள்ளது. திருவள்ளூர் வட்டாரத்தில், நடப்பு கோடை பருவத்தில், 500 ஹெக்டேர் பச்சை பயறு பயிரிடப்பட்டு உள்ளது. ஹெக்டேருக்கு, 1,000 கிலோ உற்பத்தி, நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து, வேளாண் துறை சார்பில், 25 கிலோ டி.ஏ.பி., உரம், விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.
இதுகுறித்து, திருவள்ளூர் ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் எபினேசன் கூறுகையில், "பூக்கும் தறுவாயில் உள்ள பச்சை பயறுக்கு, இலைவழி ஊட்டச்சத்தாக, டி.ஏ.பி., கரைசல் தெளிக்க வேண்டும். இதை விவசாயிகள், இலவசமாக பெற, வேளாண் விரிவாக்க மையங்களில், தேவையான உரம் இருப்பு

வைக்கப்பட்டு உள்ளது. இதை பெற விரும்பும் விவசாயிகள், வேளாண் விரிவாக்க மையங்களை நாடலாம்," என்றார்.

### கால்நடை கிளை நிலையம் மருந்தகமாக தரம் உயர்வு

**திருத்தணி** : முருக்கம்பட்டு கால்நடை கிளை நிலையம், தரம் உயர்த்தி, மருந்தகமாக மாற்றம் செய்யப்பட்டது. திருத்தணி கோட்டத்தில், 19 கால்நடை மருந்தகங்கள், ஆறு கிளை நிலையங்கள் என, மொத்தம், 25 இடங்களில் செயல்பட்டு வந்தன. இதில், திருத்தணி ஒன்றியம் முருக்கம்பட்டு கிளை நிலையம், தற்போது தரம் உயர்த்தி, கால்நடை மருந்தகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து, திருத்தணி உதவி கோட்ட இயக்குனர் செல்லத்துரை கூறுகையில், "முருக்கம்பட்டு கிளை நிலையம், கடந்த, 2011ம் ஆண்டில்தான் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு, தரணிவராகபுரம், முருக்கம்பட்டு மற்றும் சூர்யநகரம் ஆகிய மூன்று ஊராட்சிகளில் இருந்து, 12 ஆயிரம் கால்நடைகள் சிகிச்சைக்காக வருவதால், தரம் உயர்த்த வேண்டும் என, கடந்த ஆண்டு, அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி, கடந்த, 1ம் தேதி முதல், மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது," என்றார்.

### பச்சை பயறு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

**பொன்னேரி** : பச்சை பயறு பயிரிடுவதில், விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பா பருவத்திற்காக, நெல் பயிரிடப்பட்டிருந்த இடங்களில், அறுவடை பணிகள் முடிந்து உள்ளன. சம்பா பருவத்திற்கு பின்னர், பச்சை பயறு மற்றும் தர்ப்பூசணி பயிரிடுவர். தற்போது, விவசாயிகள் பச்சை பயறு பயிரிடுவதில் ஆர்வமாக ஈடுபட்டு உள்ளனர்.

குறைந்த முதலீடு, குறைந்த நாட்கள் பயிர் காலம் என்பதால், இதில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். ஒரு ஏக்கருக்கு, எட்டு கிலோ முதல், 10 கிலோ வரை, விதை

பயறு விதைக்கப்படுகிறது. ஒரு கிலோ விதை பயறு, அரசு மானிய விலையில், 55 ரூபாய்க்கும், சந்தை விலையில், 80 ரூபாய்க்கும் கிடைக்கிறது. இதன் பயிர்காலம், 50 - 60 நாட்கள் முடிந்து, அறுவடை செய்யும் போது, இரண்டு முதல், நான்கு மூட்டை வரை விலை கிடைக்கும். இது, சந்தை நிலவரத்திற்கே, 3,500 - 4,000 ரூபாய் வரை விலை கிடைக்கும். உத்தண்டிகண்டிகை, கூடுவாஞ்சேரி உள்ளிட்ட கிராமங்களில் பச்சை பயறு பயிரிடப்பட்டு உள்ளது.

## மதுரை 'ஆவின் ஸ்டார்' பரிசுக்கு தும்பைப்பட்டி தேர்வு

**மதுரை**: மதுரை ஆவின் அறிவித்த போட்டியில், தும்பைப்பட்டி கூட்டுறவு பால் சொசைட்டி, '4 ஸ்டார்'களுடன், முதலிடம் பெற்றுள்ளது.ஆவின் நிறுவனத்தில் பால் உற்பத்தியைப் பெருக்க, முதல்வர் பரிசுப் போட்டி அறிவித்தார். இதையடுத்து, மதுரை ஆவின், அதிக பால் கொள்முதல் செய்யும் கூட்டுறவு சொசைட்டி மற்றும் தனிநபர்களை தேர்வு செய்தது.இதில் தும்பைப்பட்டி கூட்டுறவு சொசைட்டி முதலிடம் பெற்றது. இதற்கு நான்கு ஸ்டார்களுடன், ரூ. 25 ஆயிரம் பரிசு வழங்கப்படும். இரண்டாம் பரிசு ரூ. 15 ஆயிரத்தை, மூன்ற ஸ்டார்கள் பெற்ற, கோட்டநத்தம்பட்டி சொசைட்டியும், மூன்றாம் பரிசான ரூ. 10 ஆயிரத்தை, தேனி மாவட்டம் முத்தாலம்மன்பட்டி சொசைட்டியும் பெற்றன.இவை தவிர ஒரு ஸ்டார் பெற்ற 7 சொசைட்டிகளான கட்டதேவன்பட்டி, என்.பெருமாள்கோயில்பட்டி, தனியாமங்கலம், ஏ.உத்தப்பநாயக்கனூர், கொட்டக்குடி, இ.புதுப்பட்டி, தேனிமாவட்டம் தாடிசேரி சொசைட்டிகளுக்கு தலா ரூ. ஆயிரம் வழங்கப்படும்.இதுதவிர முதல் 100 பேருக்கு மூன்று ஸ்டார்களுடன், தலா ரூ. 3 ஆயிரமும், 101வது முதல் 200 வரை உள்ளவர்களுக்கு இரு ஸ்டார்களுடன், தலா ரூ. 2 ஆயிரமும், 201 முதல் 300வது நபர் வரை ஒரு ஸ்டாருடன், தலா ரூ. ஆயிரமும் வழங்கப்பட உள்ளது.ஆவின் சேர்மன் தங்கம், பொதுமேலாளர் கிறிஸ்டி கூறியதாவது: ஆவினுக்கு வழங்கும் பால் அளவு, தரம், தொடர்ச்சியாக வழங்கல், வரவு செலவு கணக்குகள் முறையாக பராமரிப்பு, அரசு திட்டங்களை

செயல்படுத்துதல், என பல வகைகளில் மதிப்பீடு செய்து இந்த பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது, என்றனர்.

## 64 ஆயிரம் கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி

**ஸ்ரீவில்லிபுத்தூர்**: ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்ட பகுதிகளில், 64 ஆயிரம் கோழிகளுக்கு ,கழிச்சல் நோய் தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது.கோடை காலங்களில், கோழிகளுக்கு கழிச்சல் நோய் ஏற்படுவது வழக்கம். இதை முன் கூட்டியே தடுப்பதற்காக, கால்நடை துறை சார்பில், தடுப்பூசி சனிக்கிழமை தோறும் இலவசமாக போடப்பட்டு வருகிறது. கடந்த 3 ம் தேதி முதல், கிராமங்கள் தோறும் கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம், கால்நடைத்துறை சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. உதவி இயக்குனர் சஞ்சீவ்ராஜ்,"" இம் முகாம் 16ம் தேதி வரை நடக்கிறது. இதில் 64,800 கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி போடப்பட உள்ளது. கோழிவளர்ப்பவர்கள் இந்த முகாமை பயன்படுத்தி கொள்ளலாம்," என்றார்.

## களை கட்டிய மாட்டு சந்தை

**வேலூர்**: வேலூர் அடுத்த பொய்கை மாட்டு சந்தையில், அதிகளவிலான மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டதால், சந்தை களை கட்டியது.

வேலூர் அடுத்த பொய்கையில் மாதந்தோறும், மாட்டுச்சந்தை நடக்கும். நேற்று நடந்த மாட்டு சந்தையில், காலை, 6 மணியில் இருந்து மாலை, 4 வரை, ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் இருந்து ஏராளமான மாடுகளை, வியாபாரிகள் கொண்டு வந்தனர்.

நேற்று மட்டும் சந்தைக்க, 1,756 மாடுகள் விற்பனைக்கு வந்தது. இதில், ஜெர்ஸி, வேடர்ன், டைனஸ், எருமை, நாட்டு மாடுகளை, விவசாயிகள் போட்டி போட்டு வாங்கினர். பசு மாடு, ஒன்று, 30,000 ரூபாய் முதல், 85, 000 ரூபாய் வரையிலும், எருமை மாடுகள், 35, 000 ரூபாய் முதல், 75,000 வரையிலும், ஜெர்ஸி மாடுகள், 35,000 முதல், 60,000 வரையிலும் விற்பனையானது. மாட்டுச் சந்தை மூலம், 900

மாடுகள் விற்பனையானது. இதனால், பொய்கை பஞ்சாயத்துக்கு, நேற்று ஒரே நாளில், 12 லட்ச ரூபாய் வருமானம் கிடைத்தது.

**காதலர் தின கொண்டாட்டம் ஓசூரில் இருந்து 50 லட்சம் ரோஜா ஏற்றுமதி**

**ஓசூர்**: காதலர் தினத்தை முன்னிட்டு, ஓசூரிலிருந்து, 50 லட்சம் ரோஜாக்கள், வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஓசூர் தாலுகாவுக்கு உட்பட்ட, பேரிகை, பாகலூர், கெலமங்களம் உள்ளிட்ட பகுதிகளில், 1,100 ஏக்கர் பரப்பளவில், பசுமை குடில் அமைத்து, ரோஜா சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதிகளில் இருந்து, ஆண்டுதோறும் காதலர் தினத்தை முன்னிட்டு, பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா, நியூசிலாந்து மற்றும் அரேபிய நாடுகளுக்கு, ரோஜா அனுப்பப்படுவது வழக்கம்.

கடந்த ஆண்டு, காதலர் தினத்தை முன்னிட்டு, சீனா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் இருந்து, அதிகளவு ரோஜா ஏற்றுமதி செய்யப்பட்டதால், ஓசூர் ரோஜாக்களுக்கு வரவேற்பு குறைந்து, ஏற்றுமதி பாதிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு, சீனாவில், ரோஜா சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதால், உலக நாடுகள் கவனம், இந்தியா பக்கம் திரும்பி உள்ளது.

இதனால், மலர் சாகுபடியில் முதல் இடத்தில் உள்ள ஓசூரில், ரோஜா ஏற்றுமதி களை கட்ட துவங்கியுள்ளது. ஒசூரில் இருந்து, கடந்த ஜனவரி, 25ம் தேதி முதல், காதலர் தின ரோஜா ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பெங்களூர் தேசிய மலர் ஏல மைய கணக்கின்படி, பிப்ரவரி, 11ம் தேதி வரை, 50 லட்சம் ரோஜா, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஓசூர் விவசாயி சிவா கூறியதாவது:

ஓசூரில், ஆறு மாதத்துக்கு முன், பலத்த சூறாவளி காற்று வீசியதால், ரோஜா சாகுபடி பாதிக்கப்பட்டதால், இந்த ஆண்டு, உற்பத்தி குறைவு தான். இருந்த போதிலும், சீனா, எத்தியோபியாவில், உற்பத்தி குறைந்துள்ளதால், ஓசூர் ரோஜா தேவை அதிகரித்துள்ளது.ஓசூரில், காதலர் தினத்தை முன்னிட்டு, தாஜ்மகால், கிராண்ட் காலா, ஒயிட், அவலான்ஜி, ஃபஸ்ட் ரெட், பிங்க் நோபில்ஸ்,

கார்வெட்டா ஆரஞ்ச், எல்லோ, ஒயிட் போன்ற, முன்னணி ரோஜாக்களை, தர அடிப்படையில் பிரித்து, பத்து முதல்,40 ரூபாய் வரை, விலை நிர்ணயம் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, காதலர் தினத்தை முன்னிட்டு, ஒரு தாஜ்மகால் ரோஸ், ஏழு ரூபாய் வரை ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த, 11ம் தேதி வரை, ஒரு ரோஜாப்பூ, 12 ரூபாய் வரை விற்பனையானது. இன்று (நேற்று), உலக சந்தையில், ரோஜா ஏற்றுமதி அதிகரித்ததால், ஐந்து ரூபாய் விலை குறைந்து, ஒரு ரோஸ், ஏழு ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஜனவரி, 25ம் தேதி முதல், கடந்த, 11ம் தேதி வரை, பெங்களூரு தேசிய மலர் ஏற்றுமதி மைய கணக்கீட்டின் படி, இதுவரை, 50 லட்சத்துக்கும் மேற்பட்ட மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஓசூரில், காதலர் தினத்தை முன்னிட்டு, ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்துள்ளதால், பேரிகை, கெலமங்களம், பாகலூர் போன்ற பகுதிகளில், மின்வெட்டு தளர்த்தப்பட்டுள்ளது, என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லா கடன்**



**புதுடெல்லி**: சர்க்கரை ஆலைகளுக்கு விரைவில் வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்றும், இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகை கிடைக்கும் என்றும் மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு கோடி கணக்கான ரூபாய் பாக்கி வைத்துள்ளது. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில், பல்வேறு காரணங்களால் இந்த நிலுவைத் தொகையை வழங்கமுடியாமல் சர்க்கரை ஆலைகள் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன. ஆலைகளுக்கு வங்கிகள் மூலம் வட்டியில்லா கடன் வழங்கவும், இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு பாக்கி தொகை வழங்கவதோடு ஆலைகளும் நெருக்கடியில் இருந்து விடுபடும் என்றும் மத்திய அரசு அறிவித்தது. இதுகுறித்து மத்திய நிதி அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், 'நாடு முழுவதும் கரும்பு விவசாயிகளுக்கு சுமார் ழீ10 ஆயிரம் கோடி வரை சர்க்கரை ஆலைகள் பாக்கி வைத்துள்ளது.

இந்த தொகையை வழங்கவும், ஆலைகள் தொடர்ந்து செயல்படவும் வங்கிகள் மூலம் வட்டியில்லா கடன் ஆலைகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது. இதுவரை ழீ3,500 கோடி அளவிற்கு கடன் உதவி கோரி ஆலைகள் விண்ணப்பம் கொடுத்துள்ளது. தகுதியுள்ள ஆலைகளுக்கு கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து நடைமுறைகளும் பின்பற்றப் பட்டு வரும் செப்டம்பருக்குள் ஆலைகளுக்கு கடன் வழங்கப்படும். அதன்பின்னர் விவசாயிகளுக்கு ஆலைகள் பாக்கி தொகையை வழங்கும். இந்த செயல்பாடுகள் அனைத்தும் கண்காணித்து உறுதி செய்யப்படும்' என்றார்.

**வீராணம் கிராமத்தில் நெல் கொள்முதல் துவக்கம்**

**வலங்கைமான்,** : தினகரன் செய்தி எதிரொலி காரணமாக வீராணம் கிராமத்தில் நெல் கொள்முதல் செய்யும் பணி கடந்த 10ம் தேதி முதல் நடந்து வருகிறது. திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுகா வீராணம் கிராமத்தில் 7 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த நேரடி கொள்முதல் நிலையம், நடப்பாண்டு திறக்கப்படும் என எதிர்பார்த்து விவசாயிகள் 1000 மூட்டை அளவுக்கு நெல்லை குவித்து வைத்து காத்திருந்தனர். போதிய பணியாளர்கள் இல்லாததால் வீராணம் பகுதியில் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை எனவும், வேறு ஒரு பகுதியில் கொள்முதல் நிலையம் முடிவுக்கு வரும் வேளையில், அப்பணியாளர்களை இப்பகுதிக்கு மாற்றி கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் கூறி வந்தது. இதுபற்றி தினகரனில் கடந்த 9ம் தேதி படத்துடன் செய்தி வெளியானது.

இதன் எதிரொலியாக மாவட்ட நிர்வாகம் 10ம் தேதி வீராணம் கிராமத்தில் நெல் கொள்முதல் செய்வதற்கு தேவையான சாக்குகள், தராசு, பணம் உள்ளிட்டவைகளை உடனடியாக வழங்கியது. இதையடுத்து அன்று முதல் நெல் கொள்முதல் துவங்கியது. வீராணம் மற்றும் சுற்றியுள்ள 20க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் நெல் கொள்முதல் செய்து உடனுக்குடன் பணம் பெற்று செல்கின்றனர்.

**வயல்களில் எலிகளை ஒழிக்க வேளாண்துறை ஆலோசனை**

**பழநி,** : விவசாய நிலங்களில் பயிர்களை சேதப்படுத்தும் எலிகளை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண்மைத்துறையினர் விவசாயிகளுக்கு விளக்கி வருகின்றனர்.

இதுகுறிதது வேளாண்மைத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

‘‘வயல்களில் பயிர் செய்யும் முன்பு எலி வளைகளை தோண்டி அழிக்க வேண்டும். வரப்புகளின் ஓரங்களில் களை எடுத்து மண் அடைத்துக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் எலி வளைகளை அமைக்க இயலாது. உழும் போது ஆழமாக உழுவதன் மூலம் எலி வளைகளை உடைக்கலாம். குறுகிய வரப்புகள் அமைக்க வேண்டும். புதர்களை அழிக்க வேண்டும்.

வைக்கோல் போர்களை வயலுக்கு அருகில் அமைக்க கூடாது. ஆந்தைகள் போன்ற இரவு பறவைகள் அமர 'டி' வடிவ குச்சிகளை நட வேண்டும். அதன் மூலம் எலிகளை இயற்கை முறையில் அழிக்கலாம். வெளிச்சமான விளக்கின் மூலம் ஓடாமல் நிற்கும் எலிகளை தடியால் அடித்து கொல்ல வேண்டும். எலிகளின் இயற்கை எதிரியான ஆந்தை மற்றும் பாம்பு போன்றவற்றை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். மூங்கில் கிட்டிகளை 1 ஏக்கருக்கு 20 கிட்டிகள் வீதம் வைத்து எலிகளை பிடித்து அழிக்கலாம்.

வாயகன்ற பானைகளில் சாணம் கலந்த நீரை நிரப்பி மேற்பரப்பில் சோறு போட்டு வைத்தால் அவற்றை உண்ண வரும் எலிகள் அந்த சாண நீரில் மூழ்கி இறந்து விடும். எ.எல்.பி போன்ற விஷ மாத்திரைகளை வளைக்கு ஒன்று வீதம் போட்டு ஈரமண்ணால் மூட வேண்டும். ப்ரோமோடையலான் மருந்து கொண்ட முஷ்-முஷ் என்ற உணவு கட்டியை ஏக்கருக்கு 20 என்ற எண்ணிக்கையில் வைத்து எலிகளை அழிக்கலாம். இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.

**கூடுதல் மகசூலுக்கு டிஏபி தெளிக்க பரிந்துரை**

**பழநி,** : பயிறு வகைகளில் அதிக விளைச்சல் பெற டி.ஏ.பி. கரைசல் பயன்படுத்த வேண்டும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பழநி பகுதியில் 10 ஆயிரம் எக்டேருக்கு மேல் பயிறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள பயிறுவகைகளில் நல்ல தரமான மணிகளை பெறுவது குறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:

தரமான பயிறுகளை பெற்றிடவும், கூடுதல் மகசூல் பெற்றிடவும் டி.ஏ.பி. கரைசலை இருமுறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டி.ஏ.பி. உரத்தினை முதல் நாள் 10 லிட்டர் நல்ல தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் மாலை ஊற வைத்த கரைசலில் இருந்து தெளித்த நீரை வடித்து எடுத்து

அதனை 190 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலமாக பூக்கும் தருவாயில் ஒரு முறை தெளிக்க வேண்டும். பின்னர் 10 முதல் 15 நாள் இடைவெளியில் மற்றொரு முறை தெளிக்க வேண்டும்.

இப்படி தெளிப்பதன் மூலம் அதிகப்படியான பூக்கள் பூக்கும். திறட்சியான மணிகளும் நல்ல விளைச்சலும் பெறலாம். தற்சமயம் டி.ஏ.பி. கரைசல் விரிவாக்க மையத்தில் மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் உரிய மானிய விண்ணப்பம் பெற்று வாங்கிக் கொள்ள லாம் என்றனர்.

**விதிகளை மீறும் விதை விற்பனையாளர் மீது நடவடிக்கை**

**திண்டுக்கல்,** : விதிகளை மீறும் விதை விற்பனையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இணை இயக்குநர் சவுந்திரம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கோவை விதைச்சான்றுத்துறையின் விதை ஆய்வு இணை இயக்குநர் சவுந்தரம் நேற்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது, விதை ஆய்வு மற்றும் விதைச் சான்று பணிகள் சோதனை செய்யப்பட்டன.

பின்னர் வத்தலக்குண்டு, ஆத்தூர், திண்டுக்கல் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களை பார்வையிட்டார்.

விதையின் முளைப்புத்திறன், ஈரப்பதம், சுத்தத்தன்மை ஆகியவற்றின் முக்கியத்துவம், விதைகளைச் சேமிக்கும் முறைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து விதைச்சட்டங்கள் 1966 மற்றும் விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவை குறித்தும் விதை விற்பனையாளர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. விதைச் சட்ட விதிகளை மீறும் விதை விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து திண்டுக்கல் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையம், விதைச்சான்றுத்துறை அலுவலகம் ஆகியவற்றிலும் ஆய்வு செய்தார். சாகுபடி செய்யப்பட்டுள்ள விதைப்பண்ணை பரப்புகளை விடுதல் இன்றி பதிவு செய்ய

அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது கரூர் விதை ஆய்வு துணை இயக்குநர் ரமேஷ்பாபு, திண்டுக்கல் விதைச்சான்று உதவி இயக்குநர் பாலசுப்பிரமணி, விதை ஆய்வாளர்கள், விதைச்சான்று அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**விவசாய கண்காட்சியை காண சிறப்பு ஏற்பாடு**

**சிவகங்கை,** : நாக்பூர் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தலைமையில் தேசிய அளவிலான விவசாய கண்காட்சி கடந்த 9ம் தேதி முதல் நடந்து வருகிறது. கண்காட்சியை விவசாயிகள், பொதுமக்கள் காண வசதியாக, லீttஜ்://ணீரீக்ஷீவீஷ்மீதீநீணீst.ஸீவீநீ.வீஸீ  என்ற இணையதளத்தில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது. சிவகங்கை வட்டார விவசாயிகளுக்கு வசதியாக, சிவகங்கை வட்டார வளர்ச்சி அலுவலக கூட்டரங்கில் நாளை வரை கண்காட்சி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**வாலாஜாபாத் பகுதியில் பயிரிட்ட இடத்திலேயே காய்கறி விற்பனை அமோகம் விரும்பி வாங்கும் மக்கள்**

**வாலாஜாபாத்,** : வாலாஜாபாத் பகுதியில் பயிரிட்டுள்ள இடத்திலேயே சாலையோரத்தில் காய்கறி விற்கப்படுவதால் மக்கள் விரும்பி வாங்கி செல்கின்றன.வாலாஜாபாத்-தாம்பரம் சாலையை ஒட்டி ஊத்துக்காடு, தேவேரியம்பாக்கம், நத்தாநல்லூர், மதுராநல்லூர், தாழம்பட்டு, லிங்காபுரம், அளவூர், வாரணவாசி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு சாலையையொட்டி இருபுறத்திலும் விவசாய நிலங்கள் உள்ளன. இங்கு பயிரிடப்படும் காய்கறிகளான முள்ளங்கி, வெண்டை, தக்காளி, கத்திரி, காராமணி, பாகற்காய், புடலங்காய், தர்பூசணி மற்றும் அனைத்து வகை கீரைகளும் பயிரிடப்படுகிறது. இவற்றை தேவைக்கேற்ப அறுவடை செய்து, அந்த

இடத்திலேயே சாலை ஓரத்தில் கடைகள் அமைத்து விற்பனை செய்கின்றனர். இது அவ்வழியாக வாகனங்களில் செல்வோரிடையே வரவேற்பை பெற்றுள்ளது. இதுகுறித்து வியாபாரிகளிடம் கேட்டபோது, ''வாலாஜாபாத், காஞ்சிபுரம், தாம்பரத்தில் வேலை செய்பவர்கள், திரும்பி வரும்போது காய்கறிகளை வாங்கி செல்கின்றனர். இதுமட்டுமின்றி கிராம மக்களும் வாங்குகின்றனர். உடனுக்குடன் காய்கறிகளை பறித்து விற்பனை செய்வதால் அனைவரும் விரும்பி வாங்கி செல்கின்றனர். இதனால் நாங்கள் மார்க்கெட் சென்று காய்கறிகளை விற்பனை செய்வதில்லை. அதிகளவில் லாபமும் கிடைக்கிறது'' என்றனர்.

**மற்ற தொழில்களில் இல்லாத சிறப்பு தையலுக்கு உண்டுவேளாண் அதிகாரி பேச்சு**

**ஆலங்குடி,**

ஆலங்குடியில்  மகளிர் சுய உதவிக்குழுவினருக்கான தையல் பயிற்சி தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. வேளாண் துறையில் இருக்கும் மகளிர் தையல் தொழிலையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில் வேளாண்துறை மூலம் அளிக்கப்படும் இப்பயிற்சியில் தையல் பயிற்சிக்கு 25 பேர் மற்றும் எம்பிராய்டரி பயிற்சிக்கு 25 பேர் என 50 பேர் முதற்கட்டப் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒரு மாதம் நடைபெறும் இப்பயிற்சியின் செயல்பாடுகளை ஆலங்குடி, : மற்ற தொழில்களில் இல்லாத ஒரு சிறப்பு தையலுக்கு உண்டு என்று ஆலங்குடியில் வேளாண் துறை மூலம் மகளிர்குழுவினருக்காக வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் பார்வையிட்டார். அவருடன் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ஜெகதீஸ்வரி, திருவரங்குளம் வேளாண் உதவி இயக்குநர் சிவக்குமார் ஆகியோரும் வந்திருந்தனர். அப்போது முதற்கட்டப் பயிற்சியில் பெண்கள் தாங்கள் தைத்த துணிகள் எம்பிராய்டரி ஆகிய வேலைப்பாடுகளைக் காண்பித்தனர்.
பின்னர் வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் பேசுகையில், வேளாண் தொழில் செய்வதற்கே அரசு கடன் தருகிறது, வங்கிகளும் தருகின்றன. வங்கிக் கடன் பெறுவதற்காக மட்டுமின்றி பெண்கள் தங்களைத் தாங்களே

முன்னேறுவதற்குத்தான் வேளாண் துறை மூலம் ஆர்வமுள்ள பெண்களைத் தெரிவு செய்து இப்பயிற்சியை வழங்குகிறது. பயிற்சி முடித்தவர்கள் முடிந்த மட்டிலும் தாங்களே தையல் இயந்திரங்களை வாங்கி தாங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். தொழில் செய்ய விருப்பமுள்ளவர்கள் தொழிலாக எடுத்து அதிக வருவாய் ஈட்டும் முயற்சியில் ஈடுபடலாம். மற்ற தொழில்களில் இல்லாத ஒரு சிறப்பு தையலுக்கு உண்டு. அதாவது தையல் கலையைக் கற்றிருக்க வேண்டும் என்பதோடு கலைநயம் மிக்கவராக மாறினால் ஒரே தையல் இயந்திரம், ஊசி வைத்துக் கொண்டு விதவிதமாகத் தைத்து அதிக வருவாய் ஈட்ட முடியும். தொழிலையும் முன்னேற்றத்துக்குக் கொண்டு வந்து பெண்கள் தாங்களும் வாழ்வில் உயரலாம். அதற்கு தையல் மற்றும் எம்பிராய்டரி கற்றுக் கொண்ட மகளிர் முன்வர வேண்டும் என்றார். மேம்பாட்டுக்குழு உறுப்பினர் மதியழகன் நன்றி கூறினார்.

**மேலப்பெருமழை கிராமத்தில் அன்னாசி பயிரிட முன்வந்தால் வேளாண்துறை உதவி செய்யும்கலெக்டர் தகவல்**

**முத்துப்பேட்டை,** : மேலப்பெருமழை கிராமத்தில் அன்னாசி பழம், மிளகு பயிரிட முன்வருவோருக்கு உதவி செய்ய வேளாண் துறை தயாராக இருப்பதாக கலெக்டர் தெரிவித்தார்.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அடுத்த இடும்பாவனத்தில் நேற்று மக்கள் நேர்காணல் முகாம் கலெக்டர் நடராஜன் தலைமையில் நடந்தது. முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு தையல் மெஷின், சலவை இயந்திரம், வேளாண்மைத்துறை சார்பில் 10 பேருக்கு கைத்தெளிப்பான் மெஷின், தார்பாய், வருவாய்த்துறை சார்பில் 54 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, சமூக பாதுப்புத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி, 67 பேருக்கு குடும்ப அட்டை வழங்கி கலெக்டர் பேசியது:

இப்பகுதியில் உள்ள மேலப்பெருமழை கிராமத்தில் அன்னாசிப்பழம் பயிரிடவும், மிளகு மற்றும் மூங்கில்கள் பயிரிட முன்வருவோருக்கு அரசு உதவி செய்ய தயார் நிலையில் உள்ளது. நெல் பயிரிடுவதுதான் இப்பகுதி விவசாயிகளுக்கு முக்கியமாக

இருந்தாலும், அறுவடை செய்த பிறகு அந்த இடத்தில் வேறு தானியங்கள் பயிரிட வேளாண்மைத்துறை சார்பில் அறிவுரை வழங்கப்படும்.

முத்துப்பேட்டை ஒன்றிய பகுதியில் நீர் நிலைகளை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததால், தற்போது ஒன்றியம் பசுமையாக மாறியுள்ளது என்றார்.

முன்னதாக ஆர்டிஓ சுப்பு வரவேற்றார். மாவட்ட வருவாய் அலுவலர் மணிமாறன், மாவட்ட சுகாதார துணை இயக்குனர் பரணிதரன், ஆதிதிராவிடர் நலத்துறை மனோகரன், தேசிய முன்னோடி வங்கி மேலாளர் ராம்ராஜ், மாவட்ட ஊராட்சித்தலைவி ஜெயலெட்சுமி அம்பிகாபதி, ஒன்றியக்குழு தலைவர் நடராஜன், ஒன்றிய கவுன்சிலர் காமராஜ், கூட்டுறவு வங்கி தலைவர் அம்பிகாபதி, ஊராட்சி தலைவர்கள் அமுதா மனோகரன், பூவாணன் ஆகியோர் பேசினர்.

நிகழ்ச்சியில் தாசில்தார் ராஜகோபால், வட்ட வழங்கல் அலுவலர் மதியழகன், தனி தாசில்தார் மலர்க்கொடி, வருவாய் ஆய்வாளர் ராமச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மங்களூர் ஒன்றியத்தில் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்**

**திட்டக்குடி,** : மங்களூர் ஒன்றியத்தில் மக்காச் சோளம் 11 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும், பருத்தி 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. சோளம் பயிரிடுவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு விதைப்பு கூலி, களை எடுத்தல், அறுவடை, உரமிடுதல் என செலவு ரூ.10 ஆயிரம் ஆகிறது. தற்பொழுது மக்காச்சோளம் மற்றும் பருத்தி அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மக்காச்சோளம் அறுவடை இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்ய ஏக்கர் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 400 செலவாகிறது. இவ்வாறு அறுவடை செய்யும் சோளத்தை தனியார் வியாபாரிகள் கிராமத்தில் முகாமிட்டு கொள்முதல் செய்து வருகின்றனர்.

இவர்கள் விவசாயிகளின் அறியாமையை பயன்படுத்தி மூட்டை ஒன்றுக்கு 5 கிலோ முதல் 7 கிலோ வரை கூடுதல் எடை வைத்து ஏமாற்றுவதுடன் சந்தை

மதிப்பைவிட விலை குறைவாக வாங்கி செல்கின்றனர். எடை, விலை ஆகியவற்றில் விவசாயிகளை ஏமாற்றி கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். இதேபோல் பருத்தி அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காமல் அறுவடை தாமதம் ஆகிவருகிறது. இதனை சாதகமாக பயன்படுத்தி கொள்ளும் மர்ம நபர்கள் இரவு நேரங்களில் அறுவடை செய்து மினி லாரிகளில் திருடி சென்று சேலம் ஆத்தூர் பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர். இதையும் மீறி விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் விளைந்த பருத்தியை அறுவடை செய்து சேலம், ஆத்தூர் பகுதிக்கு விற்பனைக்கு கொண்டு சென்றால் அங்கு வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து மிக குறைந்த விலையில் பருத்தி, சோளம் ஆகியவற்றை கொள்முதல் செய்கின்றனர்.

எனவே விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்க மங்களூர் வட்டாரத்தில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் கொள்முதல் நிலையத்தை திறக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**ஹெக்டேருக்கு 13 டன் மக்காச்சோள சாகுபடியில் எசனை விவசாயி சாதனை கலெக்டர் பாராட்டு 2014-15 க்கு பயனாளிகள் தேர்வு**

இந்நிலையில் வேளாண் இணைஇயக்குநர் ஆல்பிரட் தெரிவிக்கையில், 2014-2015ம் ஆண்டிற்கு இதே திட்டத்தின்கீழ் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் தேர்வு நடந்து வருவதால், பயன்பெற விரும்பும் மக்காச்சோள, பருத்தி விவசாயிகள், சம்மந் தப்பட்ட பகுதிகளின் வேளாண் உதவிஇயக்குநர்களை சந்தித்து தங்களது பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும் எனக்கேட்டுக்கொண்டுள்ளார்.

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் ஒருஹெக்டேரில் ஒருலட்சம் பெறும் திட்டத்தின்கீழ் மக்காச்சோளம் சாகுபடியில் சாதனை படைத்த விவசாயியை கலெக்டர் பாராட்டியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் புதிதாக ஒரு ஹெக்டேரில், அதாவது இரண்டரை ஏக் கரில் மக்காச்சோளமோ, பருத்தியோ சாகுபடிசெய்து ரூ லட்சம்பெறும் திட்டத்தை

கலெக்டர் தரேஸ்அஹமது புதிதாக அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின்படி பெரும்பாலான நிலப்பரப்பில் மானாவாரி சாகுபடியே மேற்கொண்டுவரும் பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்திடும், குறைந்த பட்சம் ஒருஹெக்டேர் நிலமுடைய 750 விவசாயிகள், பருத்திசாகுபடி செய்திடும் குறைந்தபட்சம் ஒருஹெக்டேர் நிலமுடைய 350விவசாயிகள் எனமொத்தம் 1100விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு ரோவர்வேளாண் அறிவியல் மையத்தில் சாகுபடிக்கு முன்னதாக கடந்த மே மாதத்தில் சாகுபடிக்கான நுட்பத்தை அறிந்துகொள்ள ஏதுவாக 10நாள் சிறப்புப்பயிற்சி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சம்மந்தப்பட்ட விவசாயிகளின் வயல்களுக்கே வேளாண் மைத்துறை அலுவலர்கள் நேரில்சென்று பார்வையிட்டு, இடுபொருட்களை வழங்கினர். பிறகு வீரிய ஒட்டுரக விதைகளை வழங்கினர். நுண்ணூட்டச் சத்துக்கள், உயிர் உரங் கள், செயற்கை உரங்கள் ஆகியவற்றை மானாவாரி மேம்பாட்டுத் திட்ட நிதியைக் கொண்டு மானியத்தில் வழங்கினர். வறட்சியைத் தாங்கக்கூடிய நுண்ணூட்டச் சத்துக் களை இடும்படி தொடர்ந்து பரிந்துரைத்து வந்தனர். இதில் 20சதவீத விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்திருந்த மக்காச்சோளத்தை அறுவடை செய்துவிட்டனர். பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை ஒருஹெக்டேரில் சராசரியாக நான்கரை டன் மக்காச் சோளமே அறுவடை செய்து வந்துள்ள நிலையில், தற்போது ஒருஹெக்டேரில் ஒரு லட்சம் சாகுபடித் திட்டத்தின்கீழ் எசனையைசேர்ந்த விவசாயி ராமலிங்கம் என்பவர் 13டன் மக்காச்சோளத்தை சாகுபடிசெய்து புதிய சாதனை படைத்துள்ளார். இவர் என்கே-6240 என்ற ஹைபிரிட் ரகத்தை சாகுபடி செய்து சாதனை படைத் துள்ளார். இதற்காக சிறுதானிய நுண்ணூட்டச் சத்துக்களை பனிரெண்டரை கிலோவும், சிங்சல்பேட் 25கிலோவும், உயிர்உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா மற்றும் இதரஉரங்களை எருவுடன் கலந்தும் பயன்படுத்தியுள்ளார். விதைநேர்த்தி செய்துள்ளார். இதன்மூலம் தற்போது ரூ1லட்சத்து,50ஆயிரம் மதிப்பிலான 13டன் மக்காச் சோளத்தை (13,235கிலோ)அறுவடைசெய்து சாதனை படைத்துள்ளார். இதேபோல

ஈச்சம்பட்டியை சேர்ந்த சாகுல்ஹமீது என்பவர் 12டன்னும்(12,772கிலோ), குரும்பலூரைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் 9டன்னும் அறுவடை செய்துள்ளனர். இவர்களுக்கு கலெக்டர் தரேஸ்அஹமது, வேளாண்மைத்துறை இணைஇயக்குநர் (பொ) ஆல்பிரட், வேளாண் உதவிஇயக்குநர் சேகர் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

**மகாராஷ்டிராவில் தேசிய அளவில் வேளாண் கருத்தரங்கம் 40 பெரம்பலூர் விவசாயிகள் பங்கேற்பு**

**பெரம்பலூர்,** : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் 40பேர் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடக்கும் தேசியஅளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பங்கேற்க உள்ளனர்.1963ம்ஆண்டு மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூர் நகரில் தேசிய அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அதன்பிறகு தேசிய அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடைபெறாமல் இருந்து வந்தது. இந்நிலையில் 50ஆண்டுகளுக்குப்பிறகு தற்போது, அதே நாக்பூர் நகரில் தேசிய அளவி லான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மத்திய அரசால் நடத்தப்படுகிறது. இந்தக் கண்காட்சியில் பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து நெல், பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், மஞ்சள், மரவள்ளி, பயிர்வகைகள், கீரைவகைகள் உள்ளிட்டவற்றில் திறம்பட சாகுபடி செய்துவரும் விவசாயிகள், ஒன்றியத்திற்கு 10பேர்என மாவட்டஅள வில் 40பேர் தேர்வுசெய்யப்பட்டு, தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் கருத்தரங் கில் பங்கேற்க வேளாண்மைத்துறை அலுவலர் துணையுடன் அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர்.

இதில் பெரம்பலூர் வட்டாரத்திலிருந்து கோனேரிப்பாளையம் பெருமாள், அம் மாப்பாளையம் புருஷோத்தமன், துரைராஜ், கீழக்கரை செந்தில்குமார், செங்குனம் முத்தமிழ்செல்வன், எசனை செல்வக்குமார், களரம்பட்டி சுந்தரராஜ், குரும்பலூர் செல் வக்குமார், பெரம்பலூர் ஹரிஹரசுதன், துறைமங்கலம் தேவராஜ், சத்திரமனை செல்வ ராஜ், புதுநடுவலூர் சின்னத்தம்பி ஆகியோரென

4வட்டாரங்களில் இருந்து 40பேர்தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் நாக்பூர் நகரில் அமைக்கப்பட்டுள்ள தேசிய அளவிலான வேளாண் கண்காட்சியில் கலந்துகொண்டு, சாகுபடிக்கான வழிமுறைகள், வேளாண் மற்றும் அறிவியல் தொழில் நுட்பங்கள், நவீன யுக்திகள், அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியுதவிகள், உற்பத்திப் பொருளை தரம்பிரிப்பது, விற்பனை செய்வது உள்ளிட்ட சாகுபடி யுக்திகளை நேரில் கண்டறிந்தும், கேட்டறிந்தும், குறிப்பெடுத்தும் வரவுள்ளனர். இவர்க ளுக்கான போக்குவரத்து செலவுகளை வேளாண்மைத்துறையே மேற்கொண்டு வழங்கி யுள்ளது.
பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளைக் கொண்டு, வட்டாரம் வாரியாக அனைத்து விவசாயிகளுக்கும் தாங்கள் கேட்டறிந்த, கண்டறிந்த வடஇந்திய, தென் னிந்திய சாகுபடித் தொழில் நுட்பங்களை விளக்கிக்கூற ஏற்பாடு செய்யப்படுமென வேளாண்மைத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## அதிராம்பட்டினம் பகுதியில் தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு குவிப்பு

**அதிராம்பட்டினம்,** : கோடைகாலம் துவங்கவுள்ளதால் அதிராம்பட்டினம் பகுதியில் விற்பனைக்காக தர்பூசணி பழங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளது.
தமிழகம் முழுவதும் கோடை காலம் துவங்கவுள்ளது. இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து தஞ்சை மாவட்டத்துக்கு தர்பூசணி பழங்கள் விற்பனைக்காக அதிகளவில் கொண்டு வரப்பட்டுள்ளது. அதிராம்பட்டினம் பகுதியில் வியாபாரிகள் விற்பனைக்காக ஆயிரக்கணக்கான தர்பூசணி பழங்கரை லாரி மூலம் கொண்டு வந்து இறக்கி உள்ளனர்.
இதுகுறித்து தர்பூசணி வியாபாரி பன்ரூட்டி சேகர் கூறுகையில், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மரக்கானம், பனையூர், பவுன்சூர், திண்டிவனம், உப்பு வேலூர் ஆகிய பகுதிகளில் தர்பூசணி விவசாயம் செய்து வருகின்றனர். விதை போட்டு 70 தினங்களில் இந்த பழத்தை பறிக்கலாம். கோடை துவங்க உள்ளதாலும் வெயில் தாக்கம் அதிகரித்துள்ளதாலும் விற்பனைக்காக தர்பூசணி பழங்களை வாங்கி பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம், மதுக்கூர் போன்ற

பகுதிகளில் இறக்கி உள்ளோம். 1 கிலோ ரூ.15க்கு விற்பனை செய்கிறோம் என்றார்.

**உளுந்து பயிரில் அதிக மகசூல் பெற ஆடுதுறை 5 ரகத்தை பயன்படுத்தலாம் விவசாயிகளுக்கு யோசனை**

**சேதுபாவாசத்திரம்,** : உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற ஆடுதுறை 5 ரகத்தை விவசாயிகள் பயன்படுத்த யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

பயறுவகை பயிர்கள் மட்டுமே குறைவான காலத்தில் குறைவான தண்ணீரை கொண்டு நிறைவான வருமானத்தை கொடுப்பதோடு மண் வளம் நிலைக்கவும் உதவியாக இருக்கிறது. ஜனவரி மற்றும் கோடைப்பருவத்தில் பிப்ரவரி- மார்ச் மாதங்கள் உளுந்து பயிர் சாகுபடிக்கு ஏற்ற தருணமாகும். இதற்கு ஏற்ற ரகம் ஆடுதுறை 5 ஆகும். விதைப்பு செய்தவற்கு முன்பாக விதை மூலம் பரவக்கூடிய வேரழுகல், வாடல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கு 1 கிலோ விதைக்கு டிரைகோடெர்மா விரிடி என்ற எதிர்உயிர் பூசானம் 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின்னர் பயறுவகை பயிர்களுக்குரிய ரைசோபியம் என்ற நுண்ணுயிர் உரத்தை 200 கிராம், அசோஸ்பைரில்லம் 200 கிராம் என்ற உயிர் உரம் சேர்த்து 160 மில்லி ஆறிய அரிசி கஞ்சியுடன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் கலந்து ஒரு நாள் முழுவதும் நிழலில் உலர்த்தி பின்னர் உயிர்உர நேர்த்தி செய்த விதைகளை 24 மணி நேரத்திற்கு பின் விதைப்பு செய்ய வேண்டும். இவ்வாறு விதைப்பு செய்யும்போது காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து வேர் முடிச்சுகளில் சேமித்து வைத்து கொண்டு பயிர் வளர்ச்சிக்கு உதவுவதால் தழைச்சத்து இடுவதை குறைத்து கொள்ளலாம்.

நிலத்தை நன்கு உழுது சமன்படுத்தி நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ற வகையில் பாத்திகள்

அமைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழுஉரத்துடன் 20 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 16 கிலோ பொட்டாஷ் கலந்து இட வேண்டும். இதனால் அதிக மகசூல் பெறுவதுடன் மண்ணின் வளம் நிலை நிறுத்தப்படுகிறது.

விதைப்பு செய்ய ஏக்கருக்கு 12 கிலோ விதை போதுமானது. விதைக்கும்போது வரிசைக்கு வரிசை 30 செமீ, செடிக்கு செடி 10 செமீ இடைவெளியில் ஒரு குழிக்கு 2 விதைகள் வீதம் 2 செமீ ஆழத்தில் விதைப்பு செய்ய வேண்டும். விதைப்பு செய்தவுடன் ஒரு முறையும் 3ம் நாள் மறுமுறையும் அதன்பிறகு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

பூக்கும் தருணத்திலும் காய் பிடிக்கும் தருணத்திலும் நீர் பாய்ச்சுவது அவசியமாகும். இம்முறைகளை கையாளும்போது எக்டேருக்கு 1,000 கிலோ வரை மகசூல் பெறலாம்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காதலர் தினத்தை முன்னிட்டு ரூ.40 கோடிக்கு ரோஜா ஏற்றுமதி**



உலகம் முழுவதும் பிப்வரி 14–ந் தேதி காதலர் தினமாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு ரூ.40 கோடி மதிப்புள்ள 2 கோடி ரோஜாக்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் 1.40 கோடி

ரோஜாக்கள் ஏற்றுமதியாகியுள்ளன. ஆக, ஆண்டுதோறும் ரோஜா ஏற்றுமதி அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதே சமயம் இந்தியாவில் இந்த ஆண்டில் இளங்காதலர்கள் மத்தியில் தங்க ஆபரணங்கள் மோகம் தணிந்து விட்டதாக தெரிகிறது. அதற்குப் பதிலாக சாக்லேட் ரகங்களையும், பூக்களையும் பரிசாக வழங்க ஏராளமான காதலர்கள் முடிவு செய்து விட்டதாக கூறப்படுகிறது.

## இந்தியாவின் போட்டி

கென்யா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் ரோஜா ஏற்றுமதியில் முன்னிலை வகித்து வருகின்றன. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இந்த நாடுகள் இந்தியாவின் போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்திய ரோஜாக்களுடன் ஒப்பிடும்போது கென்யா ரோஜாக்களின் விலை அதிகமாக உள்ளது. எனவே விரைவில் ரோஜா ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தைப் பிடித்தாலும் வியப்படைவதற்கில்லை என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. காதலர் தினத்தை முன்னிட்டு இந்த ஆண்டில் இறுதியாக கடந்த 11–ந் தேதி ரோஜாக்கள் ஏற்றுமதியாகின. சென்ற ஆண்டில் இறுதியாக பிப்ரவரி 9–ந் தேதியன்று ஏற்றுமதி நடந்தது.

ஆஸ்திரேலியாவின் இறக்குமதியாளர்கள் 20 லட்சத்திற்கும் அதிகமான ரோஜாக்களுக்கு ஆர்டர் செய்துள்ளனர். இந்த மலர்கள் இன்றும், நாளையும் அங்குள்ள சிறப்பங்காடிகளில் விற்பனை செய்யப்பட உள்ளன. இந்திய பூக்களுக்கான பாரம்பரிய சந்தையான ஜப்பானிலும் இந்த ஆண்டில் ரோஜா இறக்குமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய பூக்கள் ஏல மையமாக திகழும் ஹாலந்து நாட்டில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஏலமும், பூ விற்பனையும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்நாட்டு மொத்த விற்பனையாளர்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக பூக்களை கொள்முதல் செய்ய விரும்புகின்றனர். இந்தியாவின் சிவப்பு ரோஜாக்கள் ஏற்றுமதிக்கு இதுவும் சாதகமாக அமைந்துள்ளது.

பொதுவாக பூக்கள் ஏற்றுமதியால் இந்தியாவிற்கு அதிக அன்னியச் செலாவணி வருவாய் கிடைக்கிறது. கடந்த 2010–11–ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.296 கோடிக்கு பல வகை பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 2011–12–ல் ஏற்றுமதி ரூ.365 கோடிக்கு உயர்ந்தது. சென்ற நிதி ஆண்டில் ரூ.423 கோடியாக அதிகரித்தது.

**24 மாதங்களில் இல்லாத அளவிற்கு, ஜனவரியில் சில்லறை விலை பணவீக்கம் 8.79 சதவீதமாக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

**புதுடெல்லி,**

ஜனவரி மாதத்தில், சில்லறை விலை பணவீக்கம் 24 மாதங்களில் இல்லாத அளவிற்கு 8.79 சதவீதமாக குறைந்துள்ளது. டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது இது 1.08 சதவீதம் குறைவாகும். உணவு பொருள்கள் விலை குறைந்துள்ளதே இதற்கு காரணமாகும்.

<u>உணவு பொருள்கள்</u>

டிசம்பர் மாதத்தில் உணவு பொருள் பணவீக்கம் 12.16 சதவீதமாக இருந்தது. இது தற்போது 9.90 சதவீதமாக குறைந்துள்ளது. காய்கறி மற்றும் அத்தியாவசிய உணவு பொருள்கள் விலை குறைந்துள்ளது.

ரிசர்வ் வங்கி ஜனவரி மாதம் 28–ந் தேதி வெளியிட்ட பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் எதிர்பார்ப்புக்கு மாறாக முக்கிய கடன்களுக்கான வட்டியை 0.25 சதவீதம் உயர்த்தியது. பொருளாதாரம் மற்றும் தொழில்துறை உற்பத்தி மந்தமாக உள்ள நிலையில், ரிசர்வ் வங்கியின் இந்த நடவடிக்கை தொழில்துறையினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது.

ரிசர்வ் வங்கி துணை கவர்னர் உர்ஜித் பட்டேல் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டி பணக் கொள்கை குறித்து முடிவு செய்யும்போது சில்லறை விலை பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதை முக்கிய இலக்காகக் கொண்டு ரிசர்வ் வங்கி செயல்பட வேண்டும் என பரிந்துரை செய்தது.

இந்நிலையில் சில்லறை விலை பணவீக்கம் மிகவும் குறைந்துள்ளதால் ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியை இனி உயர்த்த வாய்ப்பில்லை என சில நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

2015 ஜனவரி மாதத்திற்குள் 8 சதவீதமாகவும், 2016 ஜனவரிக்குள் 6 சதவீதத்திற்கும் கீழும் சில்லறை விலை பணவீக்கத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என உர்ஜித் பட்டேல் கமிட்டி தெரிவித்தது.

மொத்த விலை பணவீக்கம்

நீண்ட கால அடிப்படையில் இந்த பணவீக்கத்தை 4 சதவீதமாக வைத்து இருக்க வேண்டும் என்றும் இந்த கமிட்டி மேலும் தெரிவித்தது. டிசம்பர் மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் ஐந்து மாதங்களில் இல்லாத அளவிற்கு 6.16 சதவீதமாக குறைந்தது. ஜனவரி மாதத்திற்கான மொத்த விலை பணவீக்கம் குறித்த புள்ளி விவரம் நாளை வெளியிடப்படுகிறது.

**கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி விறுவிறுப்பு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

**கொச்சி,**

இந்தியாவின் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சர்வதேச அளவில் முன்னணியில் உள்ள தாய்லாந்து, சீனா மற்றும் வியட்நாட் ஆகிய நாடுகளின் ஏற்றுமதி குறைந்ததே இதற்கு காரணமாகும்.

<u>நோய் தாக்குதல்</u>

கடந்த ஆண்டில் இந்த நாடுகளின் மீன் பண்ணைகளில் நோய் தாக்கியதால் ஏற்றுமதி மிகவும் பாதித்தது. இதன் காரணமாக இந்தியாவின் ஏற்றுமதி உத்வேகம் அடைந்தது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஏப்ரல்–டிசம்பர்) கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் 47.38 சதவீதம் அதிகரித்து ரூ.21,829 கோடியாக உயர்ந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.14,811 கோடியாக இருந்தது. மேலும் இது கடந்த முழு நிதி ஆண்டின் மொத்த ஏற்றுமதி மதிப்பை காட்டிலும் (ரூ.18,856 கோடி) அதிகமாகும்.

அதேசமயம், முதல் 10 மாதங்களில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி அளவு அடிப்படையில் 4 சதவீதம் குறைந்து 6.92 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது.

இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 7.21 லட்சம் டன்னாக இருந்தது. 2012–13 முழு நிதி ஆண்டில் 9.28 லட்சம் டன்னாக இருந்தது.

டிசம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில் மொத்த கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியில் இறால்களின் பங்கு 2.29 லட்சம் டன்னாக உள்ளது. இதில், பண்ணைகளில் வளர்க்கப்படும் இறாலின் பங்கு 78 சதவீதமாகும். கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில் பதப்படுத்தப்பட்ட இறாலின் பங்களிப்பு 66 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, சென்ற முழு நிதி ஆண்டில் 51 சதவீதமாக இருந்தது.

வெளிநாடுகளில் இந்தியாவின் வண்ணமெய் இறாலுக்கு தேவைப்பாடு நன்றாக உள்ளது. இவ்வகை இறால் ஏற்றுமதி ரூபாய் மதிப்பு அடிப்படையில் 81 சதவீதமும், டாலர் அடிப்படையில் 79 சதவீதமும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மொத்தத்தில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி நன்கு அதிகரித்துள்ளது.

<u>விசாகப்பட்டினம்</u>

நாட்டின் மொத்த இறால்கள் ஏற்றுமதியில் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் பங்கு அளவு அடிப்படையில் 38 சதவீதமாக உள்ளது. மதிப்பு அடிப்படையில் அமெரிக்காவின் பங்களிப்பு 27.25 சதவீதமாக உள்ளது. விசாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து அதிகபட்சமாக 23 சதவீதம் ஏற்றுமதியாகியுள்ளது. இதன்படி இறால் ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் இத்துறைமுகமே முதலிடத்தில் உள்ளது.

**சிறிய அளவில் விளைநிலங்கள் குறைந்ததால் உணவு உற்பத்தி பாதிக்காது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

**புதுடெல்லி,**

சிறிய அளவில் விவசாய நிலம் குறைந்துள்ள போதிலும் உணவு உற்பத்திக்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாது என மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

2007–08–ஆம் நிதி ஆண்டில் விவசாய மற்றும் பயிரிடத் தகுதியான நிலங்கள் 18.24 கோடி ஹெக்டேராக இருந்தது. ''2010–11–ல் இந்த நிலங்கள் 18.20 கோடி ஹெக்டேராக குறைந்துள்ளது. விவசாயம் சாராத நோக்கங்களுக்காக விளைநிலங்கள் பயன்படுத்தப்பட்டதே இதற்கு காரணம். 25.89 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் உழுத நிலையில் சாகுபடி செய்யப்படாமல் உள்ளன. இது வழக்கமான நடைமுறைதான். ஈரப்பதம், சேமிப்பு மற்றும் களைகள், பூச்சிகள், நோய்களை கட்டுப்படுத்துவதற்கான இவ்வாறு செய்யப்படுகிறது'' என சரத் பவார் அண்மையில் பாராளுமன்ற மக்களவையில் தெரிவித்தார்.

அதிகரித்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கவில்லை என்ற புகாரை அவர் மறுத்தார். ''2001–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை ஆண்டுக்கு சராசரியாக 1.32 சதவீதம் உயர்ந்து வருகிறது. ஆனால் 2010–11 நிதி ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்று

ஆண்டுகளாக உணவு தானியங்கள் உற்பத்தி சராசரியாக 5.77 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது'' என்று அவர் பதில் அளித்தார்.

**குடியாத்தம் மோர்தானா அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் விவசாயிகள், பொதுமக்கள் கோரிக்கை**



குடியாத்தம் மோர்தானா அணையின் தோற்றம்

குடியாத்தம் மோர்தானா இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று விவசாயிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>மோர்தானா அணை</u>

வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் இருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் தமிழக –ஆந்திர மாநில எல்லையோரம் மோர்தானா அணை அமைந்துள்ளது. இந்த அணை கடந்த 2000–ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது. இந்த 13 ஆண்டுகளில் இதுவரை 4 முறை மட்டுமே அணை நிரம்பி வழிந்துள்ளது.

இந்த அணையில் இருந்து 9 முறை பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கடைசியாக கடந்த 2013–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6–ந் தேதி திறந்து விடப்பட்டது. தற்போது கோடை காலம் தொடங்கி விட்டதாலும், குடியாத்தம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவரும் சூழ்நிலையில் விவசாயப் பாசனத்திற்காகவும், குடிநீர் பிரச்சினைக்காகவும்

மோர்தானா அணையை திறந்துவிடவேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

<u>நீர்மட்டம் உயர வாய்ப்பு</u>

மோர்தானா அணையின் முழுநீர்மட்டம் 11.50 மீட்டர். அணையின் முழு கொள்ளளவு 261.36 மில்லியன் கனஅடி ஆகும். தற்போது அணையில் 4.50 மீட்டர் (15 அடி) தண்ணீர் உள்ளது. இதன்படி அணையில் உள்ள 91.750 மில்லியன் கனஅடியில் இருப்பு தண்ணீர் (31.225) போக மீதமுள்ள 60.525 மில்லியன் கனஅடி தண்ணீரை பயன்பாட்டிற்காக திறந்து விடலாம் என விவசாயிகள் தெரிவித்து உள்ளனர். இந்த தண்ணீரை தொடர்ந்து ஆற்றில் திறந்து விட்டால் 4 நாட்களுக்கு ஆற்றில் நீர் செல்லும். ஆற்றில் தண்ணீரை திறந்துவிட்டால் இதன் மூலம் கவுண்டன்யா ஆற்றின் இருபுறமும் உள்ள 20 கிராமங்கள் பயன் அடையும்.

மேலும் குடியாத்தம் நகரம், மோர்தானா, கொட்டாரமடுகு, ஜிட்டப்பல்லி, சேம்பள்ளி, ஜங்காலபள்ளி, உப்பரபள்ளி, தட்டப்பாறை, ஆண்டிகான்பட்டி, ரங்கசமுத்திரம், அக்ராவரம், பெரும்பாடி, மீனூர், மூங்கப்பட்டு, சீவூர், தாழையாத்தம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் விவசாய கிணறுகளின் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு உள்ளது.

<u>முதல் –அமைச்சர்...</u>

எனவே முதல் –அமைச்சர் போர்கால அடிப்படையில் மோர்தானா அணையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களும், விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கோவை வர்த்தக மையத்தில் ரூ.3½ கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம்**



கோவை வர்த்தக மையத்தில் ரூ.3½ கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது. தேயிலைத்தூள் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது.

<u>தேயிலை வர்த்தக மையம்</u>

கோவை– மேட்டுப்பாளையம் ரோடு ஜி.என்.மில்ஸ் பகுதியில் தேயிலை வர்த்தக மையம் உள்ளது. இங்கு வாரந்தோறும் மின்னணு முறையில் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த ஏலதாரர்கள் பங்கேற்று தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை ரகங்களை ஏலம் எடுத்து வருகிறார்கள். இதன்படி நடைபெற்ற இந்த ஆண்டுக்கான 6–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–

<u>தேயிலைத்தூள்</u>

தேயிலைத்தூள் ரகத்தை பொறுத்தவரை 3 லட்சத்து 2 ஆயிரத்து 681 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 2 லட்சத்து 58 ஆயிரத்து 338 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. இது 85 சதவீதம் ஆகும். 44 ஆயிரத்து 343 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்துள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் ஏல மதிப்பு 94 ரூபாய் 31 காசு ஆகும். இது கடந்த வாரம் 96 ரூபாய் 5 காசாக இருந்தது. இதன்படி கிலோவுக்கு 2 ரூபாய் 19 காசு விலை குறைந்து உள்ளது. இதன் மொத்த ஏல மதிப்பு ரூ.2 கோடியே 43 லட்சத்து 63 ஆயிரத்து 857 ஆகும்.

<u>இலைரக தேயிலை</u>

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 56 ஆயிரத்து 435 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 30 ஆயிரத்து 498 கிலோ ஏலம் போனது. இது 83 சதவீதம் ஆகும். 25 ஆயிரத்து 937 கிலோ இலைரக தேயிலை தேக்கம் அடைந்துள்ளது. ஒரு கிலோ இலைரக தேயிலையின் ஏல மதிப்பு 82 ரூபாய் 81 காசாக இருந்தது. இது கடந்த வாரம் 85 ரூபாய் 9 காசாக இருந்தது. இதனால் 3 ரூபாய் 9 காசு விலை குறைந்து உள்ளது. இதன் விற்பனை மதிப்பு ரூ.1 கோடியே 8 லட்சத்து 6 ஆயிரத்து 539 ஆகும்.

<u>ரூ.3½ கோடிக்கு வர்த்தகம்</u>

தற்போது நடந்து முடிந்த இந்த ஏலத்தில் 3 லட்சத்து 88 ஆயிரத்து 836 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலை ரக தேயிலை விற்பனை ஆகி உள்ளது. 70 ஆயிரத்து 280 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை தேக்கம் அடைந்து உள்ளது. இந்த ஏலத்தில் ரூ.3 கோடியே 51 லட்சத்து 70 ஆயிரத்து 396–க்கு வர்த்தகம் நடைபெற்று உள்ளது. இந்த தகவலை தேயிலை விற்பனை மைய(போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்தார்.

**கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை குணப்படுத்த விவசாயிகள் மருந்துகளை வாங்கி பயன்படுத்தக் கூடாது**

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்து போனதால் விவசாய தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் ஆடுகள், மாடுகள் மற்றும் கோழிகளை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களுடைய ஆடு, மாடுகள் மற்றும்

கோழிகளுக்கு நோய் வந்தால் அதனை சரி செய்வதற்கு மருத்துவரின் ஆலோசனைபடி மருந்துகளை வழங்கவேண்டும்.

இதுகுறித்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் பீர்முகமதுவிடம் கேட்ட போது, அவர் கூறியதாவது:–

மாவட்டத்தில் கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டால் கால்நடை டாக்டரின் ஆலோசனைப்படி மருந்துகளை விவசாயிகள் வழங்கவேண்டும். கடந்த சில தினங்களுக்கு முன்பு தாடிக்கொம்பை அடுத்த ஆத்துப்பட்டியில் உள்ள ஒரு தனியார் கோழிப்பண்ணையில் கோழிகளுக்கு நோய் தாக்கி திடீரென இறந்தன. இதுகுறித்து பண்ணை வைத்து உள்ள விவசாயி கால்நடை டாக்டருக்கு எந்தவித தகவலும் தெரிவிக்கவில்லை. அந்த விவசாயி அந்த சுற்றுப்புற பகுதியில் உள்ள ஒரு மருந்துக்கடையில் கோழிகளுக்கு நோய் தாக்கி இருப்பதை கூறி, மருந்துகளை வாங்கி பயன்படுத்தி உள்ளார். ஆனால் அந்த மருந்திற்கு நோய்கள் தீராமல் இருந்தது. உடனே அந்த மருந்தை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மையத்திற்கு கொண்டு வந்தார். அந்த மருந்தை ஆய்வு செய்த போது, ஆடுகள், மாடுகளுக்கு நோய் ஏற்பட்டால் கொடுக்க கூடியதாக இருந்தது. அதனை தவறுதலாக கோழிகளுக்கு அவர் வழங்கி இருப்பது தெரிய வந்தது.

இதை தொடர்ந்து அந்த விவசாயிக்கு தகுந்த அறிவுரை வழங்கப்பட்டது. கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டால், விவசாயிகளே கடைகளில் மருந்துகளை வாங்கி பயன்படுத்தக் கூடாது. அதில் மருந்துகள் மாறி போனால் கால்நடைகள் இறப்பு ஏற்பட்டு பொருளாதார நஷ்டம் ஏற்படும். எனவே கால்நடைகளுக்கு நோய்களை தீர்ப்பதற்கு தகுந்த மருந்துகளை விவசாயிகள் வாங்கி பயன்படுத்துவதில் போதிய விழிப்புணர்வு ஏற்படவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.